பக்கங்கள்: 12 விலை : 30/-

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 05 வள்ளுவர் ஆண்டு 2052 தை 08 வியாழக்கிழமை 21.01.2021 கதிர் 77

இது ரகசியம் அல்ல!

'வட்டுக்கோட்டைக்கு வழி கேட்டால் துட்டுக்கு இரண்டு கொட்டைப் பாக்கு என்றானாம்' – என்று ஒரு பேச்சு மொழி நம்மத்தியில் உண்டு.

அப்படி ஒரு அனுபவம் எனக்கு ஏற்பட்டுள்ளது.

ஐ.நா மனித பக்கம்02 »

# கோட்டா அரசால் நீதி கிடைக்காது!

## மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் சுட்டிக்காட்டு



தமது முடிவுகளை அடிக்கடி மாற்றியமைக்கும் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையிலான அரசின் செயற்பாடுகளாலும் மற்றும் நடவடிக்கைகளாலும் மனித உரிமை மீறல்களாலும் பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி கிடைப்பதற்கான சாத்தியக்கூறுகள் இல்லாமல் போயுள்ளன.

– இவ்வாறு தெரிவித்துள்ளது மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம்.

(விரிவான செய்தி 3ஆம் பக்கத்தில்)

## அமெரிக்க ஜனாதிபதியாக பதவி ஏற்றார் ஜோ பைடன்



அமெரிக்க ஜனாதிபதியாக ஜோ பைடன், துணை ஜனாதிபதியாக கமலா ஹரிஸ் ஆகியோர் பதவி யேற்றுக்கொண்டனர்.

வொஷிங்டனில் இலங்கை – இந்திய நேரப்படி நேற்று இரவு 10.30 மணியளவில் பதவியேற்பு விழா ☞2

## இலங்கையில் சகலருக்கும் இராணுவப் பயிற்சி எதற்கு?

### அரசால் முடியாத காரியம் என்று சபையில் பொன்சேகா விளக்கம்



இலங்கையில் 18 வயதுக்குக் கூடிய அனைவருக்கும் இராணுவப் பயிற்சி வழங்குவதற்காக தற்போதைய அரசுக்கு 7 ஆயிரத்து 500 கோடி ரூபாய் செலவு செய்ய முடியுமா?

– இவ்வாறு ☞2

# இலங்கைக் கடற்படையினரின் டோறாவினால் மோதப்பட்ட இந்திய ட்ரோலரில் இருந்த 2 மீனவர்களின் சடலங்கள் மீட்பு!

## மற்றிருவரின் கதி இன்னும் தெரியவில்லை






(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம்,ஜன.20

ட்ரோலர் மீன்பிடிப் படகில் இலங்கை கடற்பரப்பிற்குள் ஊடுருவிய சமயம் இலங்கைக் கடற்படையினரின் டோறாவுடன் மோதியதில் உயிரிழந்தவர் எனக் கூறப்படும் இந்திய மீனவர்களில் இருவரது உடல்கள் மீட்கப்பட்டு யாழ்ப்பாணம் எடுத்து வரப்பட்டன.

இலங்கை கடல் எல்லைப் பரப்பில் கச்சதீவுக்கும் நெடுந்தீவுக்கும் இடையில் திங்கட்கிழமை இரவு மீன்பிடியில் ஈடுபட்ட இந்திய மீனவர்களுக்குச் சொந்தமான ஒரு ட்ரோலர் படகினையும் அதில் பயணித்த நான்கு இந்திய மீனவர்களையும் காணவில்லை என இந்திய ☞2

## கொரோனாச் சாவு 274 ஆக அதிகரிப்பு

இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றால் மேலும் ஒருவர் உயிரிழந்துள்ளார்.



மல்லவகெதர பிரதேசத்தைச் சேர்ந்த 53 வயதுடைய பெண்ணொருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இதன்படி கொரோனா வைரஸ் தாக்கத்தால் இலங்கையில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 274 ஆக அதிகரித்துள்ளது.

## தமிழக மீனவரின் படகில் உயிரிழந்தவர்களில் ஒருவர் யாழ்ப்பாணம் குருநகரைச் சேர்ந்தவர்

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம், ஜன. 21

இலங்கை கடற்பரப்பிற்குள் ஊடுருவிய சமயம் இலங்கை கடற்படையினரின் டோறாவுடன் மோதி உயிரிழந்த நான்கு மீனவர்களில் ஒருவர் யாழ்ப்பாணம் குருநகரைச் சேர்ந்த ☞2

## ஹிட்லர் – சார்லி சாப்ளின் என்று இல்லாமல் ஒரே கதாபாத்திரமாக இருந்து செயற்படுங்கள்

### கோட்டாபயவை நாடாளுமன்றில் மீண்டும் வறுத்தெடுத்தார் ஹரின்

ஹிட்லராகவும், சார்லி சாப்ளினாகவும் இரண்டு கதாபத்திரங்களாக இருக்காது, ஒரே கதாபாத்திரமாக இருந்து செயற்படுமாறு ஆட்சியாளர்களைக் கேட்டுக்கொள்கின்றேன்.

– இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஹரின் பெர்னாண்டோ தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இதன்போது அவர் மேலும் தெரிவித்ததாவது: –

1889 இல் பிறந்த ஹிட்லரும், சார்லி சாப்ளினும் ☞2

## 54,798 ஆக எகிறியது கொரோனா தொற்று

இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை 54 ஆயிரத்து 798 ஆக உயர்ந்துள்ளது.

நேற்றும் 379 ☞2

## கோட்டாவின் அரசு பழிவாங்கும் அரசே

### போட்டுத் தாக்கும் தலதா



ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையிலான அரசு ஆட்சிக்கு வந்து ஒரு வருடகாலத்தில் பழிவாங்கல் செயற்பாடுகளைத் தவிர, நாட்டுக்குப் பயன்தரும் எந்தச் செயற்பாடுகளையும் ☞2

## தமிழ் மக்கள் மீது அடக்குமுறையை கையாளவே முயற்சிக்கின்றது அரசு

### சபையில் கஜேந்திரகுமார் எம்.பி. சீற்றம்



முப்பது ஆண்டுகால போரில் பாதிக்கப்பட்ட வடக்கு, கிழக்கு மக்களின் வாழ்வாதாரத்தை மீட்டெடுக்க அரசு எந்தவித நடவடிக்கையும் முன்னெடுக்காது அவர்களை வறுமைக்கோட்டின் கீழ் வைத்திருக்கவும், அடக்குமுறையைக் கையாளவுமே முயற்சிக்கின்றது.

– இவ்வாறு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் எம்.பி. தெரிவித்தார்.

நாடாளு ☞2

## இனி இது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
உரிமைகள் கவுன்ஸிலின் மார்ச் மாத அமர்வை ஒட்டி கவுன்ஸிலின் அங்கத்துவ நாடுகளுக்கு தமிழ்த் தேசியக் கட்சிகளின் சார்பில் அனுப்பப்படும் கடிதத்தில் ஒப்பமிடுவது பற்றிய சர்ச்சையை திங்கட்கிழமை இப்பத்தியில் எழுதியிருந்தேன்.

தமிழ் மக்கள் தேசிய கூட்டணியின் தலைவர் நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரனின் சில நடவடிக்கைகளை விவரித்து, அது குறித்து குறைப்பட்டு எனது பத்தியை முடித்திருந்தேன். அதையொட்டி – நீதியரசர் விக்னேஸ்வரனின் செயற்பாடு குறித்து – மூன்று, நான்கு கேள்விகளையும் எழுப்பியிருந்தேன்.

*“அது தொடர்பான சந்தேகங்களை நீக்குவது நீதியரசர் விக்னேஸ்வரனின் பொறுப்பு, வாசர்களும் அவர் பதிலை எதிர்பார்ப்பார்கள் என நினைக்கிறேன். அவரின் பதிலை பிரசுரிக்க நாம் தயாராக இருக்கின்றோம்”* – என்றும் குறிப்பிட்டிருந்தேன்.

நீதியரசர் விக்னேஸ்வரன் பக்கத்திலிருந்து – அவரது கூட்டணியைச் சேர்ந்த – சுரேஷ் பிறேமச்சந்திரன் நீண்ட ஒரு கடிதத்தை அனுப்பியிருக்கின்றார்.

01.‘காலைக்கதிர்’ நாளிதழில் வெளியான இப்பத்தியை வரைந்த நானும், அப்பத்தியின் வாசர்களும் தாம் பதில் கொடுக்க வேண்டிய தகுதி நிலையில் உள்ளவர்கள் அல்லர் என்று நீதியரசர் விக்னேஸ்வரன் கருதியிருக்கக் கூடுமோ, என்னவோ...! அதனால்தான் அவர் பதில் வழங்காமல் இருக்க, அவரது கூட்டணியைச் சேர்ந்த சுரேஷ் பிறேமச் சந்திரன் மூலம் கடிதம் அனுப்பட்டிருக்கின்றது.

02.ஆனாலும் கடந்த திங்களன்று என் பத்தியில் நீதியரசர் விக்னேஸ்வரனிடம் நான் எழுப்பிய கேள்விகள், சந்தேகங்களுக்குரிய எந்த விடையும் – பதிலும் – சுரேஷ் பிறேமச்சந்திரனின் கடிதத்தில் இருக்கவே இருக்கவில்லை.

‘வட்டுக்கோட்டைக்கு வழி கேட்டால் துட்டுக்கு இரண்டு கொட்டைப் பாக்கு’ என்ற மாதிரியான பதில்தான் அவரின் கடிதம்.

அன்று என் பத்தியில் கடைசியாக மூன்று கேள்விகளை எழுப்பி அதற்கு நீதியரசர் விக்னேஸ்வரனின் பதிலை நான் கோரியிருந்தேன். அவை:–

**“மூன்று கூட்டுக்களினதும் தலைவர்களான சம்பந்தன், கஜேந்திரகுமார், விக் னேஸ்வரன் ஆகியோர் மட்டுமே அரசியல் கட்சிகள் சார்பில் அந்த ஆவணத்தில் ஒப்பமிடுவது என்ற இணக்கத்துக்கு தாமும் வந்த பின்னர், தனது பங்காளிக் கட்சித் தலைவர்களின் ஒப்பத்தை – அதுவும் காலக்கெடு முடிந்த பின்னர் பெற்று – விக்னேஸ்வரன் அனுப்பும் தேவை ஏன் அவருக்கு எழுந்தது?**

**1.தாம் மட்டுமே தமது கூட்டணியின் சார்பில் ஒப்பமிடும் இணக்கத்துக்கு மற்றைய தலைவர்களுடன் தாம் ஏற்கனவே வந்துவிட்டார் என்ற உண்மையைத் தமது பங்காளிக் கட்சிகளின் தலைவர்களுக்கு அவர் கூறவில்லையா?**

**2.அதை மறைத்து, கடைசி வரையில் அவர்களும் அந்த ஆவணத்தில் ஒப்பமிடுவர் என்ற நம்பிக்கையை அவர்களுக்கு விக்னேஸ்வரன் வழங்கினாரா?**

**3. இறுதியில் தமது தவறை சுமந்திரன் மீது சுமத்தி தாம் தப்புவதற்கு அவர் முயன்றாரா?**

**இந்தச் சந்தேகங்களை நீக்குவது நீதியரசர் விக்னேஸ்வரனின் பொறுப்பு.”**

–என்றுநான்அன்றுகுறிப்பிட்டிருந்தேன். இந்தக் கேள்வி எதற்கும் சுரேஷ் பிறேமச் சந்திரன் கடிதத்தில் பதில் இருக்கவேயில்லை. அதனால் அதனைப் பிரசுரிக்கும் கடப்பாடு எனது பத்திக்கோ, எமது பத்திரிகைக்கோ இல்லை என்று கருதி அதனைத் தவிர்த்துள்ளேன்.

எனினும் சுரேஷ் பிறேமச்சந்திரன் தனது முகப்புத்தகத்தில் அதனை வெளியிட்டுள்ளார். விரும்பிய வாசகர்கள் அதைத் தேடிப் பிடித்து வாசித்தால் ‘துட்டுக்கு இரண்டு கொட்டைப் பாக்குக்கு’ விளக்கம் கிடைக்கும் என நினைக்கிறேன்.

நீதியரசர் விக்னேஸ்வரனின் பதிலை பிரசுரிக்க நாம் இன்னும் ஆர்வமாக இருக்கின்றோம். அவரிடம் பதில் – விளக்கம் – இருக்குமானால் – அத்தோடு அதைப் பிரசுரிக்கும் தகுதி நிலை எமது பத்திரிகைக்கு உள்ளது என்று அவர் கருதினால் – அவர் அனுப்பி வைக்கலாம்.

– மின்னல் –

## இலங்கைக் கடற்படை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
மீனவர்கள் தெரிவித்திருந்தனர்.

அதேநேரம் இலங்கை கடற்படையின் கப்பல் ஒன்றுடன் ஒரு விபத்து ஏற்பட்டதில் கடற்படையினரின் ஒரு கப்பலிற்கு சேதம் ஏற்பட்டு திருத்தப் பணிக்காக சேதமடைந்த கப்பல் காங்கேசன்துறை துறைமுகத்திற்கு கொண்டு வரப்பட்டதாக இலங்கை கடற்படை தெரிவித்தது.

இவற்றின் அடிப்படையில் இலங்கை கடற்படையினரின் கப்பலில் இந்தியாவில் இருந்து மீன்பிடிக்கப் புறப்பட்டு காணாமல்போன படகே மோதியிருக்கலாம்என்ற சந்தேகமும் காணாமல்போன இந்திய மீனவர் படகில் இருந்த மீனவர்கள் நால்வரிற்கும் என்ன நடந்தது என்ற அச்சம் தொற்றியிருந்தன.

இவ்வாறு பரபரப்பாக இருந்த விடயத்தில் நான்கு மீனவர்களில் இருவர் உயிரிழந்த உடலாக கச்சதீவு அருகே மீட்கப்பட்டனர் என இலங்கைக் கடற்படை தற்போது அறிவித்துள்ளது.

இதனால் தமிழ் நாட்டில் பெரும் பரபரப்பு ஏற்பட்ட நிலையில் நேற்று மதியம் இரு உடல்கள் மீட்கப்பட்டு யாழ்ப்பாணம் எடுத்து வரப்பட்டன.

## தமிழக மீனவரின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
வர் எனக் கண்டறியப்பட்டுள்ள தோடு மீட்கப்பட்ட உடல்களில் ஒன்று அவருடையது எனவும் தெரியவருகின்றது.

இலங்கைக் கடல் எல்லைப் பரப்பில் திங்கட்கிழமை இரவு மீன்பிடியில் ஈடுபட்ட இந்திய மீனவர்களிற்குச் சொந்தமான ஓர் ட்ரோலர் படகினையும் அதில் பயணித்த நான்கு மீனவர்களையும் காணவில்லை என இந்திய மீனவர்கள் தெரிவித்திருந்தனர்.

இவ்வாறு காணாமல்போன படகு இலங்கை கடற்படையினரின் கப்பலில் மோதியிருக்கலாம் என்ற சந்தேகமும் காணாமல்போன இந்திய மீனவர் படகில் இருந்த மீனவர்கள் நால்வரிற்கும் என்ன நடந்தது என்ற அச்சம் நிலவிய சமயம் நேற்று மதியம் இலங்கை கடற்படையினரால் இருவரது சடலங்கள் மீட்கப்பட்டன.

இவ்வாறு மீட்கப்பட்ட இரு சடலங்களும் செல்வம் – செந்தில்குமார் (வயது 35) மற்றும் சாம்சன் டர்வின் (வயது 28) ஆகியோருடையவாக இருக்கலாம் எனக் கருதப்படுகின்றது. படகில் பயணித்த நான்கு மீனவர்களில் ஒருவரான சாம்சன் டர்வின் (வயது 28) என்பவர் இலங்கையில் இடம்பெற்ற போரின் காரணமாக 2009ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் இருந்து இடம்பெயர்ந்து தமிழ் நாட்டில் மண்டபம் முகாமில் தங்கியுள்ள நிலையில் குடும்ப வறுமையின் காரணமாக கூலித் தொழிலிற்காக மீன்பிடியில் ஈடுபட்டவர் என்பது தற்போது தெரிய வந்துள்ளது.

மீட்கப்பட்ட இரு சடலங்களும் பி.சி.ஆர். பரிசோதனைக்காகவும் அதன் பின்னரான பிரேத பரிசோதனைக்காகவும் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டன. அதேநேரம் காங்கேசன்துறை பொலிஸார் ஊடாக நீதிவானின் கவனத்திற்கு இவ்விடயம் கொண்டு செல்லப்படவுள்ளது. நீதிமன்றின் உத்தரவிற்கமைய அடுத்த கட்ட பணிகள் இடம்பெறும்.

## 54, 798 ஆக...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
பேர் கொரோ னாத் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

மொத்தத் தொற்றாளர்களில் 50 ஆயிரத்து 940 பேருக்குக் கொரோனாவின் மூன்றாவது அலையின்போது வைரஸ் தொற்றியுள்ளது.

மொத்தத் தொற்றாளர்களில் 47 ஆயிரத்து 215 பேர் குணமடைந்துள்ளனர் எனவும், 7 ஆயி ரத்து 309 பேர் வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர் எனவும் அரச தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

## அமெரிக்க ஜனாதிபதி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...
இடம்பெற்றது.

முதலில் கமலா ஹரிஸுக்கு முதலத்தீன் உச்சநீதிமன்ற நீதிபதியான சோனியா சோடோமாயர் பதவிப்பிரமாணம் செய்து வைத்தார்.

இதன்மூலம் அமெரிக்காவின் முதல் பெண், ஆசிய வம்சாவளி கருப்பின துணை ஜனாதிபதி என்ற பெருமையை கமலா ஹரிஸ் பெற்றுள்ளார்.

கமலா ஹரிஸை தொடர்ந்து அமெரிக்காவின் 46 ஆவது ஜனாதிபதியாக ஜனநாயகக் கட்சியின் ஜோ பைடன் பதவியேற்றார்.

ஜனாதிபதி ஜோ பைடனுக்கு பாரம்பரிய வழக்கப்படி உச்ச நீதிமன்றத்தின் தலைமை நீதிபதி ஜோன் ரோபேர்ட்ஸ் பதவிப் பிரமாணம் செய்து வைத்தார்.

வொஷிங்டனில் உள்ள நாடாளுமன்ற வளாகத்தில் இந்த பதவியேற்பு நிகழ்வுகள் நடைபெற்றன.

இதேவேளை, விழாவுக்கு வருகை தந்த அனைவருக்கும் கொரோனா பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது. சமூக இடைவெளி விதிமுறைகளும் அமலில் இருந்தன.

பதவியேற்பு விழாவில் குறைந்த அளவிலானோரே பங்கேற்க அனுமதிக்கப்பட்டனர்.

முன்னாள் அமெரிக்க ஜனாதிபதிகள் பராக் ஒபாமா, பில் கிளின்டன் மற்றும் ஜோர்ஜ் டபுள்யூ புஷ் ஆகியோர் பைடனின் பதவியேற்பு நிகழ்வில் பங்கேற்றனர்.

எனினும் பதவியை இழந்த அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் இந்தப் பதவியேற்வு நிகழ்வில் பங்கேற்கவில்லை.

முன்னதாக பைடன் பதவியேற்று விழாவுக்கு சில மணி நேரங்களுக்கு முன்பாக ட்ரம்ப் வெள்ளை மாளிகையில் இருந்து வெளியேறினார்.

வெள்ளை மாளிகையில் இருந்து ஹெலிக்கொப்டரில் அருகில் உள்ள அண்ட்ரூஸ் தளத்துக்குச் சென்ற ட்ரம்ப், அங்கு செய்தியாளர்களைச் சந்தித்தார். இதன்போது ஜனாதிபதியாக பொறுப்பேற்கும் பைடனுக்கு அவர் வாழ்த்துத் தெரிவித்தார்.

தொடர்ந்து அங்கிருந்து அவர் விமானப் படை விமானத்தில் தனது சொந்த ஊரான புளோரிடாவுக்குச் சென்றார்.

## ஹிட்லர் - சார்லி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
ஒரே மாதிரியாக மீசையைக் கொண்டவர்களாகவே இருந்தனர். ஆனால், ஒருவர் உலகை அழ வைத்ததுடன் ஒருவர் உலகையே சிரிக்க வைத்தார். அதேபோன்ற இரண்டு கதாபாத்திரங்கள் தற்போது இலங்கையின் ஆட்சிப்பீடத்திலும் உள்ளது.

நான் கூறுவது நந்தசேன கோட்டாபய ராஜபக்ஷவைதான் என்று யாரும் நினைத்தால் அதற்காக மன்னித்துக்கொள்ளுங்கள்.

எவ்வாறாயினும் நாட்டில் ஹிட்லர், சார்லி சாப்ளின் போன்று இல்லாமல் ஒரே பாத்திரமாக நடந்துகொள்ளுங்கள் என்பதே எனது கோரிக்கையாக இருக்கின்றது – என்றார்.

## கோட்டாவின் அரசு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
செய்யவில்லை.

– இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் தலதா அத்துகோரல குற்றஞ்சாட்டினார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:–

வியத்மக அமைப்பினர் மீது நம்பிக்கை கொண்ட 69 இலட்சம் மக்கள் நாட்டுக்கு ஜனாதிபதி ஒருவரை தெரிவுச் செய்துள்ளனர். அதற்கான பலனை நாம் தற்போது சிறந்த முறையில் அனுபவித்து வருகின்றோம்.

கொரோனா வைரஸ் தொற்று உலகளாவிய ரீதியில் பாரியதொரு நெருக்கடியை ஏற்படுத்தியிருந்தாலும் எம்மால் அந்த வைரஸ் பரவல் நாட்டுக்குள் வரமுடியாத வகையில் நாட்டைப் பாதுகாத்துக் கொள்வதற்கான வாய்ப்பிருந்தது. எனினும், அதனை நாம் தவறவிட்டுள்ளோம்.

இந்நிலையில் நாட்டுக்குள் வைரஸ் பரவல் ஏற்படும் வரையில் அமைதி காத்துக் கொண்டிருந்து விட்டு, தற்போது எந்தவொரு பிரச்சினைக்கும் வைரஸ் பரவலைக்காரணம்காட்டிக்கொண்டிருப்பதற்கு இந்த அரசுக்கு இடமளிக்க முடியாது.

நாட்டுக்காகப் பல்வேறு வேலைத்திட்டங்களைச் செய்த எங்களது ஆட்சியைத் தோல்வியடையச் செய்வதற்காகத் தற்போதைய ஆளும் தரப்பினர் பல்வேறு சூழ்ச்சிகளைச் செய்து வந்தனர்.

இதற்காக ‘வியத்மக’, ‘எலிய’ மற்றும் ‘சிங்களே’ போன்ற அமைப்புக்களை உருவாக்கி நாட்டு மக்கள் மத்தியில் தேவையற்ற அச்சங்களை ஏற்படுத்தியிருந்தனர். நாங்கள் நாட்டின் வளங்களை வெளிநாட்டுக்கு விற்பனை செய்யப் போவதாகவும் தெரிவித்திருந்தார்கள்.

இவ்வாறு எமக்கு எதிராக பல்வேறு குற்றச்சாட்டுகளை முன்வைத்தே அவர்கள் ஆட்சி அமைத்தார்கள். இவ்வாறு தெரிவுசெய்யப்பட்ட ஜனாதிபதி ஒரு வெற்றியாளர் கிடையாது என்பதை முழு நாடுமே உணர்ந்து கொண்டுள்ளது – என்றார்.

## தமிழ் மக்கள் மீது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...
மன்றத்தில் நேற்று உரையாற்றும்போதே அவர் இதனைக் கூறினார்.

அவர் மேலும் கூறுகையில் –

குருந்தூர் மலை பிரதேச இடத்தை தொல்பொருள் திணைக்களம் ஆக்கிரமித்து வருகின்றது. எனினும், 1933ஆம் ஆண்டில் வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தலில் இது தமிழர் பகுதி என உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. பரம்பரை பரம்பரையாக தமிழர்கள் இந்த இடத்தில் மத வழிபாடுகளில் ஈடுபட்டு வந்துள்ளனர்.

எனினும், இரண்டு வாரங்களுக்கு முன்னர் இந்தப் பகுதியை இராணுவம் சுற்றிவளைத்து ஆக்கிரமித்துள்ளது.

இதனால் தைபொங்கல் தினத்தில் எமது தமிழர்கள் அங்கு செல்ல முடியாத நிலைமை உருவாகியது. கேட்டால் தொல்பொருள் திணைக்களம் இந்த இடத்தில் ஆய்வுகளைச்செய்வதாகக் கூறியுள்ளனர்.

2018 ஆம் ஆண்டில் இந்த இடத்தில் பௌத்த தேரர் ஒருவர் புத்தர் சிலை ஒன்றை வைத்து பௌத்த விகாரையை அமைக்க முயற்சித்தார். பின்னர் நீதிமன்றம் இதற்கு இடைக்காலத் தடை விதித்து அந்த நடவடிக்கையைத் தடுத்தது.

எனினும், மீண்டும் இதே இடத்தில் தொல்பொருள் திணைக்களம் ஆய்வுகளை மேற்கொள்வதாகக் கூறி விகாரை ஒன்றை அமைக்கும் முயற்சிகளை எடுத்துள்ளது.

வடக்கு, கிழக்கு தமிழ் மக்கள் இன்னமும் பொருளாதார நிலைமையில் வறுமைக் கோட்டின் கீழ் நிலையிலேயே வாழ்கின்றனர். ஏனைய மாவட்டங்களில் மக்களுடன் போட்டிபோடக்கூடிய நிலைமையில் வடக்கு, கிழக்கு மக்களின் வாழ்க்கைத் தரம் இல்லை.

எனவே, எமது மக்களை இலக்கு வைத்து நடத்தும் அடக்குமுறையை அரசு நிறுத்த வேண்டும் – என்றார்.

## இலங்கையில் சகல...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா சபையில் நேற்று கேள்வி எழுப்பினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது: –

18 வயதுக்குக் கூடிய அனைவருக்கும் இராணுவப் பயிற்சி வழங்குவதாக அமைச்சர் வீரசேகர தெரிவித்திருந்தார்.

இவ்வாறு பயிற்சி வழங்கப்படுவோர் 18 – 26 வயதுக்கு இடைப்பட்டவர்கள் என வைத்துக்கொண்டாலும், இந்த வயதெல்லைக்குள் மூன்று அல்லது நான்கு மில்லியன் பேர் இருப்பார்கள்.

அத்துடன், இவர்களுக்கு ஆறு மாத கால பயிற்சி என்றாலும் கூட ஒரு நபருக்கு ஆறு மாதங்களுக்கு ஏழரை இலட்சம் ரூபாய்கள் செலவாகும்.

ஒரு இலட்சம் பேருக்குப் பயிற்சிகளை வழங்குவதென்றால் 75 பில்லியன் ரூபாய் செலவாகும்.

இந்நிலையில், தற்போதைய அரசுக்கு 7 ஆயிரத்து 500 கோடி ரூபாய்கள் செலவு செய்ய முடியுமா?

இவ்வாறான பொய்யான காரணிகளைக் கூறி மக்களை ஏமாற்ற வேண்டாம்.

இதேவேளை, எந்தவொரு சர்வதேச நாடும் எமது நாட்டில் சுயாதீனத்தில் தலையிட அனுமதிக்க முடியாது என அரசு வீர வசனங்களைப் பேசிக்கொண்டு கொழும்புத் துறைமுகத்தை வெளிநாட்டுக்குக் கொடுத்து மண்டியிடும் நிலைமை உருவாகப் போகின்றது – என்றார்.

# மருந்துப் பொருளாகக் கஞ்சா பிரகடனப்படுத்தப்பட வேண்டும்!

## பெங்கமுவே நாலக்க தேரர் ஆலோசனை



இலங்கையில் மருந்து பொருளாக, கஞ்சாவைப் பிரகடனப்படுத்த வேண்டும் என பெங்கமுவே நாலக்க தேரர் வலியுறுத்தியுள்ளார்.

வெள்ளைக்காரர்கள் அனுமதி இன்றி, கஞ்சா பயிரிடவும் பயன்படுத்தவும் முடியாது என்றே, தடை விதித்திருந்ததாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

எனினும், கடந்த 1984 ஆம் ஆண்டு, எந்தவொரு முறையிலும் கஞ்சாவை பயன்படுத்தக் கூடாது என, சட்டம் கொண்டு வரப்பட்டுள்ளது எனவும், ஏன் அவ்வாறு செய்யப்பட்டுள்ளது எனவும் அவர் கேள்வியெழுப்பியுள்ளார்.

கஞ்சா என்பது மருந்து பொருள் என்றும் புத்த பெருமான் இதை மருந்துப் பொருளாக ஏற்றுக்கொண்டுள்ளார் எனவும் ஏன் எம்மால் ஏற்றுக் கொள்ள முடியாது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

எதிர்காலத்தில் இந்த மருந்தைப் பயன்படுத்தி நோயாளர்களைக் குணப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் மேலும் தெரிவித்துள்ளார்.

உள்நாட்டு மருந்துக்குத் தேவையான கஞ்சாவை பயிரிட அனுமதி அளிக்கப்படவேண்டும் எனவும் பெங்கமுவே நாலக்க தேரர் தெரிவித்துள்ளார்.

# வர்த்தமானி அறிவித்தல்கள் அனைத்தும் பயனற்றவையே!

## அநுரகுமார திசாநாயக்க குற்றச்சாட்டு

பொருள்களுக்கான விலை தொடர்பாக வெளியாகும் வர்த்தமானி அறிவிப்புக்கள் அனைத்தும் பயனற்றவை என தேசிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் அநுரகுமார திசாநாயக்க தெரிவித்துள்ளார்.

சீனி, தேங்காய் எண்ணெய் உள்ளிட்ட பல பொருள்களின் மீதான இறக்குமதி வரி திருத்தம் தொடர்பான வர்த்தமானி அறிவிப்புகள் தொடர்பாக நேற்று (புதன்கிழமை) சபை ஒத்திவைப்பு விவாதம் நடைபெற்றது.

அந்த விவாதத்தில் பேசிய அவர் –

வர்த்தமானிகள் வெளியிடப்படுகின்றதே தவிர அவை நடைமுறைப்படுத்தப்படுவதில்லை என்றும் அச்சிடுவதற்கான செலவினங்களை வீணாக்குவதாகவும் அநுரகுமார திசாநாயக்க குற்றம் சாட்டியுள்ளார்.

மேலும் சீனி இறக்குமதி மீதான வரி தளர்த்தப்படுவதால் ஜனவரி 10 ஆம் திகதி வரை 10 பில்லியன் ரூபா இழப்பு பதிவாகியுள்ள நிலையில் ஏன் சீனி மீதான வரி குறைக்கப்பட்டது என்றும் கேள்வியெழுப்பியுள்ளார்.



இதேவேளை இறக்குமதி தடை செய்யப்பட்டிருப்பதால் கழிப்பறைகள் அல்லது வாகனங்களுக்கான உதிரிப்பாகங்களை பெற்றுக்கொள்ள முடியாத நிலையில் மக்கள் இருக்கின்றனர் என அநுரகுமார திசாநாயக்க தெரிவித்துள்ளார்.

# முடிவுகளை அடிக்கடி மாற்றியமைக்கும் அரசின் செயற்பாடு குறித்துக் கவலை!

## கொள்கைகளுக்கான நிலையம் விசனம்

தமது முடிவுகளை அடிக்கடி மாற்றியமைக்கும் அரசாங்கத்தின் செயற்பாடுகள் மற்றும் நடவடிக்கைகள், மனித உரிமை மீறல்களால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி கிடைப்பதற்கான சாத்தியக்கூறுகள் தொடர்பாகக் கவலையை எழுப்புவதாக மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் தெரிவித்துள்ளது.

நல்லிணக்கம், பொறுப்புக்கூறல் மற்றும் மனித உரிமைகள் தொடர்பான விடயம் மற்றும் தமக்கான கடமைகளை நிராகரித்தல் போன்ற தற்போதைய அரசாங்கத்தின் நடவடிக்கைகளை மேற்கோளிட்டு அறிக்கையொன்றை அந்த அமைப்பு வெளியிட்டுள்ளது.

அந்த அறிக்கையில் –

பத்து வழக்குகளை ஆராய்ந்து இலங்கையின் குற்றவியல் நீதி அமைப்பின் தோல்விகள் மற்றும் குறைபாடுகளை மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் அடையாளப்படுத்தியுள்ளது.

இந்த வழக்குகளில் பெரும்பாலானவற்றில், பாதிக்கப்பட்டவர்களும் அவர்களது குடும்பத்தினரும் ஒரு தசாப்தத்துக்கும் மேலாக நீதிக்காகக் காத்திருப்பதாகவும் மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் சுட்டிக்காட்டியுள்ளது.

இதற்கிடையில் ஜோசப் பரராஜசிங்கம் படுகொலை மற்றும் திருகோணமலையில் ஐவர் கொல்லப்பட்ட சம்பவங்களில் குற்றம் சாட்டப்பட்டவர்கள் விடுவிக்கப்பட்டமையால் பாதிக்கப்பட்டவர்களுக்கான நீதி தவிர்க்கப்பட்டுள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளது.

ஆகவே இந்த விடயத்தில் தற்போதைய அறிக்கையில் பரிந்துரைக்கப்பட்ட கட்டமைப்பு மற்றும் சட்ட சீர்திருத்தங்களுக்கான அவசரத் தேவையை மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் மீண்டும் வலியுறுத்தியுள்ளது.

மேலும் இந்த நடவடிக்கை காரணமாக பாதிக்கப்பட்டவர்கள் இலங்கையின் குற்றவியல் நீதி அமைப்பு மூலம் எப்போதும் நீதி பெறுவதில் நம்பிக்கையை இழந்து வருகின்றனர் என்றும் அந்த அமைப்பு குறிப்பிட்டுள்ளது.

எனவே விரிவான மற்றும் உண்மையான சீர்திருத்தங்கள் மூலம் அவர்களின் கவலைகளை நிவர்த்தி செய்வது கட்டாயமாகும் என்றும் அந்த அமைப்பு சுட்டிக்காட்டியுள்ளது.

# போரால் பாதித்த மக்கள் நலன்களில் அரசுக்கு அக்கறை ஏதும் இல்லை!

## சாடுகிறார் வலி. கிழக்கு தவிசாளர் நிரோஸ்

யாழ்.மாவட்டத்தில் 10 ஆயிரத்துக்கு மேற்பட்ட குடும்பங்கள் காணியற்றுள்ளபோது தனியாருக்குச் சொந்தமான காணிகளை இராணுவத்துக்குச் சுவீகரிக்க முயற்சிக்கின்றமை போரால் பாதிக்கப்பட்ட எமது மக்களின் நலன்களில் அரசாங்கத்துக்கு கொள்கை இல்லை என்பதைத் தெளிவாகக் காட்டுவதாக ரெலோவின் யாழ்.மாவட்டப் பொறுப்பாளர் தியாகராஜா நிரோஷ் தெரிவித்துள்ளார்

கடந்த செவ்வாய்க்கிழமை தீவகத்தில் நில அபகரிப்புக்கு எதிராக இடம்பெற்ற போராட்டத்தில் கலந்து கொண்டு கருத்துரைக்கும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இதன்போது தியாகராஜா நிரோஷ் மேலும் கூறியுள்ளவை வருமாறு –

தீவகத்தில் பொதுமக்களுக்குச் சொந்தமான காணிகளை இராணுவத்துக்குச் சுவீகரிப்பதற்காக கடந்த திங்கட்கிழமை வருகை தந்திருந்த அதிகாரிகள், மக்களின் எதிர்ப்பை அடுத்துத் திரும்பினர்.

மேலும் மண்கும்பானில் பொதுமக்களுடைய காணிகளை அபகரிப்பதற்கு அதிகாரிகள் வருவார்கள். அவர்களை அளவீடு செய்ய விடாது திருப்பி



அனுப்புவதற்காக காத்திருந்தோம். பின்னர் வேலணை பிரதேச செயலகம் முன்னும் போராட்டம் நடத்தியுள்ளோம். பிரதேச செயலாளர் பொதுமக்களின் எதிர்ப்பைக் காணி அமைச்சுக்குத் தெரியப்படுத்தி, அமைச்சின் அறிவுறுத்தல் பெறும் வரையில் காணிகளில் மேற்கொண்டு நடவடிக்கை எடுக்கப்படாதென உத்தரவாதம் அளித்துள்ளமையால், இன்றைய போராட்டம் முடிவுக்குக் கொண்டு வரப்படுகின்றது.

இவ்வாறாக எமது மண்ணில் எமக்குச் சொந்தமான பிரதேசத்தில் வளமான காணிகளை இராணுவத்தினர், யுத்தத்தின்போது கையகப்படுத்தி விட்டு, இன்று அவற்றை சட்ட ரீதியிலான நிரந்தர உடமையாக மாற்றுவதற்கு பலாத்காரம் பிரயோகிக்கப்படுகின்றது.

மேலும் மக்கள், சொந்தமாக காணியைக் கொண்டிருக்கும் உரிமையைக் கூட அரசாங்கம் நசுக்குகின்றது. யுத்தத்தின் பின்னர் மக்கள் தமது காணிகளில் செயற்பாடுகளை மேற்கொள்வதற்கு வசதியாக இராணுவத்தை அரசாங்கம் முகாம்களுக்குள் மட்டுப்படுத்தியிருக்க வேண்டும்.

ஆனால் மக்களின் நிலங்களையும் அவர்களது உரிமைகளையும் இராணுவமயப்படுத்துவதில் அரசாங்கம் கரிசனை கொள்கின்றது. முதலில் சரியான கொள்கை ஒன்றை வகுத்து அரசாங்கம் காணியற்ற 10 ஆயிரம் பேருக்கு மேற்பட்டவர்களுக்கும் நிலங்களை வழங்க வேண்டும்.

தமிழ் மக்களின் பிரச்சினைகளை இராணுவ வழிமுறைகள் ஊடாக அடக்கிவிடலாம் என்பதை எடுகோலாகக் கொண்டு அரசாங்கம் செயற்படக் கூடாது. எமது ஜனநாயக உரிமைகளுக்கு அரசாங்கம் இடமளிக்கவேண்டும். எமது மக்களின் நிலங்கள் அவர்களுக்கானவையே என்பதை ஏற்றுக் கொள்ள வேண்டும். – என தியாகராஜா நிரோஷ் தெரிவித்துள்ளார்.

# விழிக்கும் வரை அழிப்புகள் தொடரும்: இழந்துவிட்டு சிந்திப்பதில் பலனில்லை!

## இந்து இளைஞர் பேரவை காட்டம்

விழிக்கும் வரை அழிப்புகள் தொடர்ந்த வண்ணமே இருக்கும் எனவும் அனைத்தையும் இழந்த பின்னர் சிந்திப்பதில் பலனில்லை என்றும் சர்வதேச இந்து இளைஞர் பேரவை தெரிவித்துள்ளது.

இதேவேளை, இந்து மதத்தின் பெயரால் பல அமைப்புகள் உள்ள போதும் தற்போதைய சூழ்நிலையில் அவை பெயரளவில் மாத்திரமே அமைப்புகளாக உள்ளன எனவும் பேரவையின் தலைவர் சிவஸ்ரீ ஜெ.மயூரக் குருக்கள் சுட்டிக்காட்டியுள்ளார்.

முல்லைத்தீவு, குருந்தூர் ஐயனார் ஆலய அழிப்புத் தொடர்பாக கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

அண்மைக் காலமாக எமது வழிபாட்டுத் தலங்கள் பலவற்றை நாம் இழந்து கொண்டிருக்கின்றோம். இதன் தொடர்ச்சியாக பல வருடங்களாக முல்லைத்தீவு மாவட்டம், குமுளமுனை, தண்ணிமுறிப்பு, குருந்தூர் மலையில் தமிழ் மக்கள் வழிபட்டுவந்த கிராமிய வழிபாட்டோடு ஒன்றிய ஆதி ஐயனார் ஆலய சூலம் உடைத்து எறியப்பட்டு புத்தர் சிலை கொண்டுவரப்பட்டு பௌத்த வழிபாடுகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இது அனைத்து தமிழ் மக்கள் மத்தியிலும் மிக வேதனையான செயலாகும்.

தொடர்பே இல்லாத இடங்களில் புதிது புதிதாக இவ்வாறான செயல்களைச் செய்வது திட்டமிட்ட செயலாகவே தோன்றுகின்றது. தற்போது ஏதோ குருந்தா சேவ பௌத்த விகாரையின் சிதைவுகள் உள்ளன என இராணுவத்தின் ஆதரவோடு தொல்லியல் திணைக்களம் ஆய்வுகளை ஆரம்பித்துள்ளது.

தற்போது புத்தர்சிலை ஒன்று குருந்தூர்மலைப் பகுதிக்குக் கொண்டுவரப்பட்டு அகழ்வாராச்சிப் பணி என்ற பெயரில் ஆரம்பித்துள்ளனர். அகழ்வாராச்சிக்கு புத்தபகவான் வர வேண்டிய தேவை என்ன இருக்கின்றது. ஒட்டு மொத்தமாக தமிழர் வழிபாட்டு நிலங்கள் பறிபோய்க்கொண்டே இருக்கின்றன.

எமது வழிபாட்டுச் சின்னங்கள் அழிக்கப்பட்டுக் கொண்டே இருக்கின்றன. இது அனைத்தையும் கண்டும் காணாதது போல் அனைவரும் கடந்து செல்கின்றனர். அரசியல்வாதிகளும் ஆன்மீகவாதிகள் அல்லது ஆன்மீக அமைப்புகளும் பெயரளவிலேயே அமைப்புகளாக இருக்கின்றன. அன்றி இனமத நலன்களை கருத்தில் கொள்வதாகத் தெரியவில்லை. ஜனாதிபதியின் செயலாளர்கள், சர்வமதப் பேரவையில் இருப்பவர்கள் என்று பலர் இருக்கின்றனர். அவர்கள் இன, மத நலன்கள் பற்றி எந்த விதமான நடவடிக்கைகளையும் மேற்கொள்வதாகத் தெரியவில்லை என்பதே உண்மை.

அந்தப் பதவிகள் தமக்கு கௌரவம் என்று நினைக்கின்றனர். ஆக, இவ்வாறான சந்தர்ப்பங்களில் ஒன்றிணைந்து இன, மத நலன்களைக் காப்பாற்ற வேண்டுமே தவிர, கடந்து போக நினைக்கக் கூடாது. ஏனெனில், நாளை அது பல இடங்களுக்கும் வரலாம்.

விழிக்கும் வரை அழிப்புகள் தொடர்ந்த வண்ணமே இருக்கும். அனைத்தையும் இழந்த பின்னர் சிந்திப்பதில் பலனில்லை எனவே, இந்த விடயத்தில் உங்கள் எதிர்ப்புகளை வெளியிட வேண்டிய தேவையுள்ளது என்பதை உணருங்கள். – என்றார்.

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## சர்ச்சையில் நமது அயலுறவு

இலங்கை – இந்திய உறவுகளுக்கு இது போதாத காலம் போலும். சாண் ஏற முழம் சறுக்கும் நிலைமை.

இப்போதுதான் இந்திய வெளிவிவகார அமைச்சர் ஜெய்சங்கர் கொழும்புக்கு வருகை தந்து பல தரப்புகளுடனும் பேசி, பிய்ந்து நூலாகித் தொங்கிய இருதரப்பு உறவுகளுக்கு ஒட்டுப்போட்டு ஒழுங்கு பண்ணி விட்டுப் போனார்.

அதற்கிடையில் மீண்டும் கிழிசல். பின்னடைவு. குழப்பம்.

இலங்கை விவகாரத்தில் இங்குள்ள தரப்புகளில் யார் உண்மையான நண்பன், யார் நண்பன் போல நடிக்கும் எதிரி என்பதை எடை போடுவதில் புதுடில்லி தொடர்ந்தும் தப்பிழைத்து வருகின்றது என்பதுதான் நாம் திரும்பத் திரும்பச் சுட்டிக்காட்டி வரும் விடயம்.

இந்திய வெளியுறவு அமைச்சர் கொழும்பு வந்து திரும்பி இரண்டு வாரங்களுக்குள் தமது உண்மையான நண்பன் கொழும்பு அரசுதானா என்பதை புதுடில்லி உரைத்துப் பார்ப்பதற்கான பல விவகாரங்கள் அரங்கேறியிருக்கின்றன.

வெளிவிவகார அமைச்சர் ஜெய்சங்கர் வந்து திரும்பிய கையோடு –

விரைவில் சட்டமன்றத் தேர்தல்களை எதிர்கொள்ளவிருக்கும் தமிழ் நாட்டில் வீண் உணர்வுக் குழப்பங்களை – உணர்ச்சிக் கொந்தளிப்புகளை – ஏற்படுத்தக் கூடிய விதத்தில் யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தில் இருந்த முள்ளிவாய்க்கால் நினைவுத் தூபி திடுதிப்பென உடைக்கப்பட்டது.

மீன்பிடிப்பதற்காக இலங்கைக் கடற்பரப்புக்குள் அத்துமீறினர் என்று கூறப்படும் தமிழக மீனவர்களின் படகுடன் இலங்கைக் கடற்படையின் டோறாப்படகு மோதிய நிலையில் அந்த மீன் பிடிப் படகு காணாமல் போயிருக்கின்றது. அதில் இருந்த நான்கு மீனவர்களில் இருவர் சடலங்களாக மீட்கப்பட்டிருக்கின்றனர்.

இந்தச் சம்பவம் நடைபெற்ற போது அருகில் வேறு இந்திய மீனவர் படகுகள் இருந்திருக்கின்றன. சம்பவத்தில் என்ன நடந்தது, எப்படி நடந்தது என்பது குறித்து அவர்கள் தமது நாட்டு அதிகாரிகளுக்கு எடுத்துரைத்திருப்பர் என்பது நிச்சயம்.

இலங்கைக் கடற்படையின் படகுகள் எதிரித்தனத்தோடு செயற்பட்டன என்ற இந்திய மீனவரின் குற்றச்சாட்டு நிச்சயம் இரு நாட்டு உறவில் பதற்றத்தை ஏற்படுத்த வல்லது.

அதுவும் பாரம்பரிய பிரதேசங்களில் மீன் பிடிப்பதற்கான தமது உரிமையை நிலை நாட்டுவதற்காக நாளை மறுதினம் சனிக்கிழமை தங்கள் படகுகள் கறுப்புக் கொடி பறக்க விட்டபடி கச்சதீவுக்கு வரிசையாக அணிவகுக்கப் போகின்றன என்று ராமேஸ்வரம் மீனவர்கள் முன்னறிவித்தல் விட்டு, போராட்ட முஸ்தீபு செய்து கொண்டிருக்கையில் அந்த மீனவர்கள் தொழில் ஈடுபட்டிருந்த படகு மோதி உடைக்கப்பட்டிருக்கின்றது. அந்த மீனவர்கள் உயிரிழக்கும் அவலம் நேர்ந்திருக்கின்றது.

ஏற்கனவே கொதி நிலையைத் தமிழகப் பக்கத்தில் ஏற்படுத்தியிருக்கும் மீனவப் பிரச்சினைக்கு மேலும் எண்ணெய் ஊற்றித் தூண்டி விட்டிருக்கின்றது தமிழக மீனவரின் படகு மோதித் தகர்க்கப்பட்ட சம்பவம்.

ஏற்கனவே இலங்கை – இந்திய கடல் எல்லை ஒப்பந்தத்தின்படி கச்சதீவில் வலைகளைக் காயப்போடும் உரிமை தங்களுக்கு இருப்பதாகக் கூறும் தமிழக மீனவர்கள், அந்தக் கச்சதீவை நோக்கி அணி வகுக்கத் தயாராக இருக்கின்றார்கள்.

இலங்கைக்கு சட்டவிரோதமாகத் தாரை வார்க்கப்பட்ட கச்சதீவை மீளப்பெற வேண்டும் என்ற கோரிக்கை ஏற்கனவே தமிழகத்தில் சூடு பிடித்துள்ள சூழலில் –

நெருங்கி வரும் தமிழகத் தேர்தலை ஒட்டி அங்குள்ள அரசியல் தரப்புகள் வாக்குகளைச் சுருட்டி அள்ளுவதற்காக என்ன 'ஸ்டண்ட்' அறிவிப்பையும் விடத் தயாராகவுள்ள அரசியல் சூழ்நிலையில் –

தமிழக மீன்பிடிப் படகுகள் மீதான அளவுக்கு மிஞ்சிய நடவடிக்கை வீண் சிக்கல்களை இலங்கை நாட்டுக்கு ஏற்படுத்தக் கூடியது.

பெருமனது பண்ணி இலங்கைக்குத் தான் தாரை வார்த்ததாகக் கருதும் கச்சதீவை, தற்போதைய அரசியல் தலைமைத்துவ மாற்றங்களின் அடிப்படையில் மீளப் பெறும் முயற்சிக்கு புதுடில்லியின் ஆசீர்வாதம் கிடைத்தால் கூட ஆச்சரியப்படுவதற்கில்லை.

இதற்கிடையில் –

இந்தியத் தீபகற்பத்துக்கும் வடக்கு இலங்கைக்கும் இடையில் இருக்கும் இலங்கையின் மூன்று முக்கிய தீவுகளில் – அனலைதீவு, நயினாதீவு, நெடுந்தீவு ஆகியவற்றில் – கணிசமான நிலப்பரப்பை மின் உற்பத்தி நிலையங்களுக்கான நிலம் என்ற அடிப்படையில் சீன நிறுவனத்துக்கு வழங்க இலங்கை முன்வந்திருக்கின்றமை இலங்கை – இந்திய உறவில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தப் போகின்றது. வடக்கு இலங்கையின் தீவகக் கூட்டத்தில் சீனா காலூன்ற அனுமதிப்பது இந்தியாவின் கேந்திரப் பாதுகாப்பு விவகாரங்களில் பேராபத்தை ஏற்படுத்தக் கூடியது. நிச்சயமாக இதனை சிறியவிடயமாக புதுடில்லி நோக்காது.

இலங்கை – இந்திய உறவுக்கு இது போதாத காலம்தான்!

# முல்லைத்தீவு குருந்தூர் மலை தமிழர்களுக்கு சொந்தமானது!

## நாடாளுமன்றில் கஜேந்திரன் எம்.பி. இடித்துரைப்பு



குருந்தூர் மலையில் முன்னெடுக்கப்பட்ட எல்லை மீள்நிர்ணய நடவடிக்கை ஊடாகத் தயாரிக்கப்பட்ட வரைபடத்தை, உடன் இரத்துச் செய்ய வேண்டும் என நாடாளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன் தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் நேற்று (புதன்கிழமை) உரையாற்றிய போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இதன்போது அங்கு தொடர்ந்தும் கருத்து வெளியிட்ட அவர் –

தமிழர்களின் நிலங்கள் மோசமாக ஆக்கிரமிக்கப்பட்டு வருகின்றன. மக்கள் கொதித்தெழுந்துள்ளனர்.

ஆகையால், இதற்கு அவசரமான தீர்வு வேண்டும். மண்டைதீவு பகுதியில் இடம்பெற்ற காணி சுவீகரிப்பு நடவடிக்கையைத் தடுத்து நிறுத்தினோம். இருப்பினும், இந்த வாரம் முழுவதும் நில அளவை செய்யப்படவுள்ளது.

அதேபோல், குருந்தூர் பகுதிக்கு அண்மையில் சென்றோம். இதன்போது, அங்குள்ள காட்டு மரங்கள் வெட்டப்பட்டு, பாதைகள் செப்பனிடப்பட்டுக் கொண்டு இருந்தன.

அத்துடன், நூல்களால் எல்லையிடப்பட்டும் இருந்தது. கட்டுமானத்துக்கான அத்திபாரமும் வெட்டப்பட்டிருந்தது. இதைக் கேட்டபோது, தொல்லியல் இடம் எனத் தெரிவிக்கப்பட்டது.

இந்தப் பகுதி தமிழர்களுக்குச் சொந்தமானது. 2018 ஆம் ஆண்டில், தமிழர்கள் இங்கு வழிபடத் தடையில்லை என முல்லைத்தீவு நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ள நிலையில், இங்கு வழிபட அனுமதி மறுக்கப்பட்டு, இந்தப் பகுதியை புத்தமயமாக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

கடந்தாண்டு டிசெம்பர் மாதம், இந்தப் பகுதியில் நிலஅளவை முன்னெடுக்கப்பட்டு, எல்லை மீள் நிர்ணயம் செய்யப்பட்டு, வரைபடமொன்று தயாரிக்கப்பட்டது.

இந்த நில அளவைப் பணி, முல்லைத்தீவு மாவட்ட நிலஅளவை அதிகாரிகளால் முன்னெடுக்காது, கொழும்பில் இருந்து வந்த அதிகாரியால் முன்னெடுக்கப்பட்டது.

அந்த நில அளவை அடிப்படையிலேயே, வரைபடம் தயாரிக்கப்பட்டுள்ளது. அதில், அந்த இடம் குருந்தி விகாரைக்குச் சொந்தமானது என அந்த அதிகாரி குறிப்பிட்டுள்ளார்.

எனவே, இந்த வரைபடம் உடனடியாக இரத்துச்செய்யப்பட்டு, இது தொடர்பில் விசாரணை முன்னெடுக்க வேண்டும். – எனக் குறிப்பிட்டுள்ளார்.

# இராஜாங்க அமைச்சரின் சாரதிக்கு கொரோனா!

இராஜாங்க அமைச்சர் தாரக பாலசூரியவின் சாரதிக்கு கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

கேகாலை பொது வைத்தியசாலையின் பேச்சாளர் ஒருவர் இந்த விடயத்தைத் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, கொரோனா தொற்றுக்குள்ளான இராஜாங்க அமைச்சர் பியல் நிஷாந்த, அவரின் மனைவி மற்றும் மகள் ஆகியோர் கொக்கல பிரதேசத்தில் தனிமைப்படுத்தல் மத்திய நிலையத்துக்கு சிகிச்சைக்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.

இராஜாங்க அமைச்சரின் இரண்டு மகன்கள், சாரதி, பாதுகாப்பு அதிகாரிகள் மற்றும் செயலாளருக்கு கொரோனாத் தொற்று ஏற்படவில்லை என்பது மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையில் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

எவ்வாறாயினும், அமைச்சருடன் நெருங்கிப் பழகிய நாடாளுமன்ற உறுப்பினர்கள் உட்பட 22 பேருக்கு சுய தனிமைப்படுத்திக் கொள்ளுமாறு சுகாதார பிரிவினர் அறிவுறுத்தியுள்ளனர்.

# மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் வழக்குகள் வீடியோ தொழில்நுட்பம் மூலம் விசாரணை!

கொழும்பு, ஜன.20

மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் வீடியோ தொழில்நுட்பம் மூலம் வழக்கு விசாரணைகள் நேற்று (செவ்வாய்க்கிழமை) நடைபெற்றுள்ளன.

வெலிக்கடை மற்றும் அங்குனுகொலபெலஸ்ஸ சிறைச்சாலைகளில் இருந்தே இந்த விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டன என நீதி அமைச்சு அறிவித்துள்ளது.

இதற்கிடையில் கைதிகள் தாக்கல் செய்த மேன் முறையீட்டு மனுக்களை விசாரிக்க நான்கு மேன்முறையீட்டு நீதிமன்றங்களை நிறுவ நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

நீதி அமைச்சர் அலி சப்ரி மற்றும் சிறைச்சாலைகள் மற்றும் கைதிகளின் புனர்வாழ்வு அமைச்சர் லொஹான் ரத்வத்த ஆகியோருடன் இடம்பெற்ற கலந்துரையாடலின்போதே இந்த முடிவு எட்டப்பட்டுள்ளது.

# இந்திய மீனவர்கள் எமது வலைகளை அறுத்து அட்டூழியத்தில் ஈடுபட்டுள்ளனர்!

## பருத்தித்துறை மீனவர் குற்றச்சாட்டு



வடமராட்சிகடற்பரப்பில்அத்துமீறிதொழிலில் ஈடுபட்டுள்ள இந்திய மீனவர்கள், பருத்தித்துறை மீனவரின் வலைகளை அறுத்து அட்டூழியத்தில் ஈடுபட்டுள்ள சம்பவமொன்று இடம்பெற்றுள்ளது.

நேற்று (புதன்கிழமை) அதிகாலை இடம்பெற்ற இந்தச் சம்பவத்தால் பாதிக்கப்பட்ட மீனவரான சுப்பர்மடம் மீனவர் சங்கத் தலைவர் தே.தேவதாசன் தெரிவித்துள்ளவை வருமாறு:–

பருத்தித்துறை சுப்பர்மடம் இறங்குதுறையிலிருந்து 15 கிலோ மீற்றர் தொலைவில் தொழிலுக்காக நேற்று அதிகாலை படகில் சென்றேன். அங்கு இந்திய மீனவர்களின் 4 படகுகள் தொழிலில் ஈடுபட்டிருந்தமையுடன், எனது 20 வலைகளை அவர்கள் அறுத்து எடுத்திருந்தனர்.

வலைகளைத் தருமாறு கேட்டேன். இந்திய மீனவர்கள் கற்களால் எனது படகை நோக்கி எறிந்தனர். தமக்கு அருகே வந்தால் தாக்குதல் நடத்துவோம் என்று இந்திய மீனவர்கள் மிரட்டினார்கள்.

மேலும், அவர்கள் முகத்தை தெரியாதவாறு துணி கட்டியிருந்தமையுடன், கொட்டன்களை வைத்திருந்தனர். பல மணிநேரம் வலைகளைக் கேட்டு காத்திருந்துவிட்டு, ஏமாற்றத்துடன் கரை திரும்பியுள்ளேன்.

சுமார் 3 லட்சம் ரூபா வலைகளை இழந்துள்ளேன். – என கவலை வெளியிட் டுள்ளார். குறித்த சம்பவம் தொடர்பாக பாதிக்கப்பட்ட மீனவர், பருத்தித்துறை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு ஒன்றையும் பதிவு செய்துள்ளார்.

# ரஞ்சன் நாடாளுமன்றுக்கு வரவே கூடாது ஆளுந்தரப்பினரால் மன்றில் இடித்துரைப்பு!

கொழும்பு, ஜன.21

நாடாளுமன்ற உறுப்பினர் ரஞ்சன் ராமநாயக்கவை நாடாளுமன்றத்துக்கு அழைத்துவரக்கூடாது என ஆளும் கட்சி உறுப்பினர்கள் கடந்த செவ்வாய்க்கிழமை சபையில் வலியுறுத்தினார்கள்.

நாடாளுமன்றம் கடந்த செவ்வாய்க் கிழமை சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தன தலைமையில் கூடியது. பிரதான நடவடிக்கைகளைத் தொடர்ந்து, எதிர்க்கட்சி உறுப்பினர் சஜித் பிரேமதாஸ சட்டப் பிரச்சினை ஒன்றை முன்வைத்து, நீதிமன்றத் தீர்ப்பின் பிரகாரம் சிறைப்ப டுத்தப்பட்டிருக்கும் ரஞ்சன் ராமநாயக் கவை நாடாளுமன்றத்துக்கு அழைத்து வர ஏன் நடவடிக்கை எடுக்க முடியாமல் போனது என கேட்டபோது, அதுதொடர்பில் ஒழுங்கு பிரச்சினைகளை எழுப்பி கருத்து தெரிவிக்கையிலேயே அவர்கள் இவ் வாறு குறிப்பிட்டனர்.

இதன்போது கருத்து தெரிவித்த ராஜாங்க அமைச்சர் நிமல் லான்சா குறிப் பிடுகையில் –

சட்டத்தின் பிரகாரம் ரஞ்சன் ராமநாயக் கவுக்கு நாடாளுமன்றத்துக்கு வரமுடி யாது. ஆனால் பொய் தர்க்கங்களை கொண்டுவந்து எதிர்க்கட்சி அவரை எப் படியாவது நாடாளுமன்றத்துக்கு அழைத்து வர முயற்சிக்கின்றார்கள்.

ரஞ்சன் ராமநாயக்க நாடாளுமன்ற வரப்பிரசாதங்களை பயன்படுத்திக் கொண்டு, நாட்டில் இருக்கும் அனைத்து வகையான நீதிமன்றங்களையும் அவம தித்து வந்தார். அதேபோன்று சட்டத்தர ணிகள் மற்றும் நீதிபதிகளையும் விமர் சித்து வந்தார். இவ்வாறு பல சமூக விரோதே நடவடிக்கைகளில் ஈடுபட்டுவந்த ரஞ்சன் ராமநாயக்கவை நாடாளுமன்றத்துக்கு அழைத்துவர முயற்சிக்கின்றனர். இதற்கு இடமளிக்கக் கூடாது. – என்றார்.

அதனைத் தொடர்ந்து எழுந்த இரா ஜாங்க அமைச்சர் இந்திக்க அநுருத்த தெரிவிக்கையில் –

ரஞ்சன் ராமநாயக்க இந்த சபையில் அனைத்து உறுப்பினர்களையும் விமர் சித்து வந்தார். நீதிபதிகளையும் மிகவும் மோசமான முறையில் விமர்சித்திருக் கின்றார். அவ்வாறு செயற்பட்ட ஒருவ



ரையே எதிர்க்கட்சி நாடாளுமன்றத்துக்கு அழைத்துவர முயற்சிக்கின்றனர்.

அதனால் நீதிமன்றங்களையும் நீதி பதிகளையும் விமர்சித்த ரஞ்சன் ராம நாயக்கவுக்கு அளித்திருக்கும் தீர்ப்பை நகைப்புக்குட்படுத்தியா, அவரை நாடா ளுமன்றத்துக்கு அழைத்துவர எதிர்க் கட்சி முயற்சிக்கின்றது எனக் கேட்கின் றேன் என்றார்.

அதனைத்தொடர்ந்து எழுந்த இரா ஜாங்க அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவிக்கையில் –

கடந்த ஆண்டு செப்ரெம்பர் மாதம் 8 ஆம் திகதி எதிர்க்கட்சிகளின் பிரதம கொர டாவான லக்ஷ்மன் கிரியெல்ல முன் வைத்த ஒரு கூற்றை சுட்டிக்காட்ட விரும் புகிறேன். அவர் கூறியவை வருமாறு:–

அரசமைப்பின் 89 ஆவது சரத்தின் பிரகாரம் மேல் நீதிமன்றத்தால் ஒரு தீர்ப்பு வழங்கப்பட்டால் நாடாளுமன்ற உறுப்பி னரின் ஆசனம் வெற்றிடமாகும். அது தொடர்பில் தீர்மானம் எடுக்க சபாநாய கருக்கு எவ்வித அதிகாரமும் இல்லை எனக் கூயிருந்தார்.

அவ்வாறு கூறியவர் மூன்று மாதங்க ளுக்கு பின்னர் மாறுபட்ட கருத்தை இன்று கூறுகிறார். ரஞ்சன் ராமநாயக்க நாட்டின் அரசமைப்புக்கும், நீதித்துறைக்கும் இழுக்கை ஏற்படுத்தியுள்ளார். சிறப்பு ரிமையை பயன்படுத்தி உயர்நீதிமன் றத்தை அவமதிக்க வேண்டாமெனக் கோருகிறோம். – என்றார்.

## விமான நிலையங்கள் இன்று முதல் திறப்பு!

விமான நிலையங்கள் இன்று (வியாழக்கிழமை) முதல் மீண்டும் சுற்றுலாப் பயணிகளுக்காகத் திறக்கப்படவுள்ளன என சுற்றுலாத்துறை அமைச் சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார்.



கொரோனா அச்சுறுத் தல் காரணமாக கடந்த வரு டம் மார்ச் மாதம் 19 ஆம் திகதி சுற்றுலாப் பயணிக ளின் வருகைக்குத் தற்கா லிகமாகத் தடை விதிக்கப் பட்டது.

எனினும் முதற்கட்ட மாக அண்மைய சில நாள் களாக உக்ரைனில் இருந்து சுற்றுலாப் பயணிகள் நாட்டை வந்தடைவதாக அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

இந்த நிலையில் இன்று முதல் சுற்றுலாப் பயணிகளுக்கான சட்டதிட்டங்கள் தளர்த்தப்பட வுள்ளன என அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன் நாட்டுக்கு பிரவேசிப்பதற்கு 72 மணித் தியாலங்களுக்கு முன்னர் சுற்றுலாப் பயணிகள் பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொள்வது கட்டாயப் படுத்தப்பட்டுள்ளதாகவும் சுற்றுலாத்துறை அமைச் சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

## அரிசி, மா மற்றும் சீனி உள்ளிட்ட 10 பொருள்களுக்கு நிர்ணய விலை!

*10 அத்தியாவசியப் பொருள்களுக்கு ஆறு மாதங்களுக்கு கட்டுப்பாட்டு விலை நிர்ணயிப்பதற்கு அரசாங்கம் தீர்மானித் துள்ளது.*

*இந்த கட்டுப்பாட்டு விலை எதிர்வரும் பெப்ரவரி முதலாம் திகதியிலிருந்து ஆறு மாத காலத்துக்கு நடைமுறையிலிருக்கும் என வர்த்தக அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார்.*

*கட்டுப்பாட்டு விலையின் பின்னர் அத் தியாவசிய உணவுப் பொருள்களை விநி யோகிப்பதற்கென விநியோகஸ்தர்களுக் கான விலைமனு கோரல் மேற்கொள் ளப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட் டுள்ளார்.*

*அரிசி, மா, சீனி, பருப்பு, வெங்காயம், கடலை, நெத்தலி, ரின் மீன் உள்ளிட்ட 10 அத்தியாவசிய உணவுப்பொருள்களுக்கே கட்டுப்பாட்டு விலை நிர்ணயிக்கப்பட்டுள் ளதாக அவர் தெரிவித்துள்ளார்.*

*குறித்த அத்தியாவசிய உணவுப்பொருள் களை நாடு முழுவதிலுமுள்ள ச.தொ.ச. மற்றும் கூட்டுறவு விற்பனை நிலையங்க ளில் பெற்றுக்கொள்ள முடியும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.*

## 10 லட்சம் இலங்கையர்களில் 2 ஆயிரத்துக்கு மேல் தொற்று!

### தொற்றுநோயியல் பிரிவு புள்ளிவிவரம்

இலங்கையின் மொத்த சனத்தொகையில் 10 லட்சம் மக்களில் 2 ஆயிரத்து 465 கொரோனா வைரஸ் தொற் றாளர்கள் பதிவாகுவதாக தொற்றுநோயியல் பிரிவு தெரிவித்துள்ளது.

அதேபோல, கொரோனா தொற்று காரணமாக மொத்த சனத்தொகையில் ஒரு மில் லியன் மக்களில் 12 பேர் உயிரிழக்கின்றனர் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஆஸ்திரேலிய சனத் தொகையில் ஒரு மில்லி யன் மக்களில் 1,121 பேர் தொற்றாளர்களாக பதிவாகி ன்ற போதிலும் அந்நாட்டில் ஒரு மில்லியன் மக்களில் 93 பேர் கொரோனாத் தொற் றுக்கு உள்ளாகி மரணிக் கின்றனர் என சுட்டிக்காட்டப் பட்டுள்ளது.

இதேவேளை, இலங்கை யில் இதுவரையான மொத்த கொரோனா நோயாளர்க ளின் எண்ணிக்கை 54 ஆயிரத்து 419 ஆகப் பதி வாகியுள்ளது. அவர்களில் 46 ஆயிரத்து 594 பேர் பூரண குணமடைந்து வீடுக ளுக்குத் திரும்பியுள்ளனர்.

மேலும், நாட்டில் கொரோ னாத் தொற்றுக்கு உள் ளாகி உயிரிழந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 273 ஆகப் பதிவாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## 245 இலங்கையர் நாடு திரும்பினர்!

கொரோனா அச்சுறுத்தல் காரணமாக தென் கொரியாவில் நிர்க்கதிக்கு உள்ளாகியிருந்த 245 பேர் நாடு திரும்பியுள்ளனர்.

அந்த அனைவரும் நேற்று (புதன்கிழமை) காலை, சிறப்பு விமானத்தின் ஊடாக கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்துள்ளனர்.

கொரோனா அச்சுறுத்தல் காரணமாக வெளி நாடுகளில் சிக்கியுள்ள இலங்கையர்களை நாட் டுக்கு அழைத்துவரும் அரசாங்கத்தின் விசேட வேலைத்திட்டத்துக்கு அமைய இந்த அனைவரும் அழைத்துவரப்பட்டுள்ளனர்.

இவ்வாறு நாட்டுக்கு அழைத்துவரப்பட்ட அனைவ ருக்கும் பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொள்ளப்பட்டு, தற்போது தனிமைப்படுத்தல் நிலையங்களுக்கு அழைத்துச் செல்லப்பட்டுள்ளனர் என விமான நிலையத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதேவேளை குவைத்துக்கு தொழில் புரியச் சென்று அங்கு நிர்க்கதிக்குள்ளாகி இருந்த 297 இலங்கையர்கள் கடந்த திங்கட்கிழமை நாட்டை வந்தடைந்தனர். இவ்வாறு வருகைதந்தவர்களுக் கும் பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொள்ளப்பட்ட துடன் தற்போது தனிமைப்படுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## திருகோணமலை பட்டின பிரதேச சபையின் புதிய தவிசாளர் கடமைகளை ஏற்றார்



கடந்த 25 வருட காலத்திற்கும் அதிகமாக தமிழர்கள் வசமிருந்த திருகோணமலை பட்டினமும் சூழலும் பிரதேச சபையின் ஆட்சி, ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன வசமா னது. திருகோணமலை பட்டினமும் சூழலும் பிரதேச சபை யின் புதிய தவிசாளர் சந்துன் ரத்நாயக்க, நேற்று முன்தி னம் (செவ்வாய்க் கிழமை) தன் கடமைகளைப் பொறுப் பேற்றுக்கொண்டார்.

நேற்றுமுன்தினம் காலை சுப வேளையில் கையொப்ப மிட்டு, தனது கடமைகளை திருகோணமலை பட்டினமும் சூழலும் பிரதேசசபையின் அலுவலகத்தில் உத்தியோகபூர்வ மாக பொறுப்பேற்றுக்கொண்டார்.

இந்நிகழ்வில் சமயத் தலைவர்கள் மற்றும் அரச அதி காரிகள் மற்றும் அவரது ஆதரவாளர்கள் பங்கேற்றி ருந்தனர்.

திருகோணமலை பட்டினமும் சூழலும் பிரதேச சபை யின் வரவு செலவுத் திட்டம் தோற்கடிக்கப்பட்டு இருந்த நிலையில் புதிய தவிசாளருக்கான தெரிவு உள்ளூராட்சி ஆணையாளர் தலைமையில் இடம்பெற்றது.

இதன்போது மேற்கொள்ளப்பட்ட திறந்த வாக்கெடுப் பின்போது ஸ்ரீலங்கா பொதுஜனபெரமுனவின் சந்துன் ரத்னாயக்க, புதிய தவிசாளராக தெரிவு செய்யப்பட்டார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

## புனானை சிகிச்சை முகாமில் இருந்து தப்பியோடிய நோயாளி பிடிக்கப்பட்டார்

புனானை சிகிச்சை முகாமில் சிகிச்சை பெற்று வந்த நிலையில், தப்பிச்சென்ற கொரோனா நோயாளி பிடிபட்டார் என பொலிஸ் ஊடகப் பேச்சாளரும் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

43 வயதான குறித்த நபர், எஹலியகொட பகுதியில் கண்டுபிடிக்கப்பட்டார் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

கொலன்னாவ – மீதொட்ட பகுதியில் உள்ள பேக்கரி ஒன்றில் பணியாற்றும் குறித்த நபர் கடந்த 13 ஆம் திகதி பி.சி.ஆர். பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டார்.

பி.சி.ஆர். முடிவில் கொரோனா தொற்று உறுதிப்படுத்தப் பட்டதைத் தொடர்ந்து, கடந்த 17ஆம் திகதி, கொரோனா சிகிச்சை நிலையத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டிருந்தார்.

இந்நிலையில் புனானை சிகிச்சை நிலையத்தில் சிகிச்சை பெற்று வந்த அவர், கடந்த செவ்வாய்க்கிழமை இரவு 7.30 மணியளவில் தப்பிச் சென்றுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

காலைக்கதிர்

# கூட்டு ஒப்பந்தத்தை இரத்து செய்தால் அது தொழிலாளர்களுக்கே பாதிப்பு!

## என்கிறார் ஜீவன் தொண்டமான்



கூட்டு ஒப்பந்தத்தை இரத்துசெய்தால் அது தொழிலாளர்களுக்கே பாதிப்பாக அமையும் என இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் பொதுச்செயலாளரும், இராஜாங்க அமைச்சருமான ஜீவன் தொண்டமான் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாகக் கருத்து வெளியிட்டுள்ள அவர்–

கம்பனிகளும், தொழிற்சங்கங்களும்தான் கூட்டு ஒப்பந்தத்தில் கைச்சாத்திடுகின்றன. அரசாங்கத்தால் மூன்றாம் தரப்பாக தலையிடவே முடியும். அந்தவகையில் விரைவில் நல்ல முடிவு கிடைக்கும் என எதிர்பார்க்கின்றோம்.

கூட்டு ஒப்பந்தம் அநீதியானது எனக் குறிப்பிட்டு தொழிலாளர்களை சிலர் தூண்டிவிடுகின்றனர். கூட்டு ஒப்பந்தத்தில் தொழிலாளர்களுக்கு நன்மைகளும் உள்ளன.

குறிப்பாக வருடம் 300 நாள்கள் வேலை வழங்கப்படவேண்டும் என அதில் வலியுறுத்தப்பட்டுள்ளது. அவ்வாறு வழங்கப்படாவிட்டால் கம்பனிகளுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கலாம்.

ஆனால் கூட்டு ஒப்பந்தம் இல்லையேல், தொழில் அமைச்சரிடம்தான் முறையிடவேண்டிவரும். கம்பனிகள் நினைத்தால் 2 நாள்கள்கூட வேலை வழங்கலாம். அவர்களின் முடிவை சவாலுக்குட்படுத்த முடியாது.

கூட்டு ஒப்பந்தத்தை இரத்துச்செய்வதற்கு நாமும் தயார். ஆனால் தொழிலாளர்களுக்கு ஏற்படும் பாதிப்புக்களுக்கு, கூட்டு ஒப்பந்தத்துக்கு எதிராக பிரசாரம் செய்பவர்களே பொறுப்புக் கூறவேண்டும். – எனக் குறிப்பிட்டுள்ளார்.

### அரசியல் பழிவாங்கல் தொடர்பாக

# ஜனாதிபதி ஆணைக்குழு சிபாரிசை நடைமுறைப்படுத்தத் தீர்மானங்கள்!

அரசியல் பழிவாங்கல் தொடர்பான விசாரணைகளை மேற்கொண்டு தகவல்களைப் பெற்றுக் கொள்வதற்கான ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் தீர்மானங்கள் மற்றும் சிபாரிசுகளை நடைமுறைப்படுத்த அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

2015 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 08 ஆம் திகதி தொடக்கம் 2019 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 16 ஆம் திகதி வரையான காலப்பகுதியில் பதவி வகித்த அரச உத்தியோகத்தர்கள், அரச கூட்டுத்தாபனங்களின் ஊழியர்கள், இராணுவத்தினர் மற்றும் பொலிஸாருக்கு இடம்பெற்றுள்ளதாகக் கூறப்படும் அரசியல் பழிவாங்கல்கள் தொடர்பான விசாரணைகளை மேற்கொண்டு தகவல்களைப் பெற்றுக் கொள்வதற்காக ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவால் ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழு நியமிக்கப்பட்டது.

அந்த ஜனாதிபதி ஆணைக்குழு சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

# சம்பள விடயத்தில் தோட்டக் கம்பனிகள் தன்னிச்சையாகச் செயற்பட முடியாது!

## எச்சரிக்கிறார் கெஹலிய



சம்பள உயர்வு விடயத்தில் தோட்டக்கம்பனிகளால் தன்னிச்சையாக செயற்படமுடியாது என அமைச்சரும் அமைச்சரவைப் பேச்சாளருமான கெஹலியரம்புக்வெல தெரிவித்துள்ளார்.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர்களுடனான சந்திப்பின் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இதன்போது அங்கு தொடர்ந்தும் கருத்து வெளியிட்டுள்ள அவர் –

பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு குறைந்தபட்ச நாள் சம்பளமாக ஆயிரம் ரூபா வழங்கப்படவேண்டும் என்பது அரசாங்கத்தின் கொள்கை ரீதியிலான முடிவாகும்.

அந்த முடிவை நிறைவேற்றும் பொறுப்பிலிருந்து அரசாங்கம் விலகாது. சவால்களை எதிர்கொள்ளும்.

சம்பள உயர்வு விடயத்தில் தோட்டக்கம்பனிகளால் தன்னிச்சையாகச் செயற்படமுடியாது.

கடந்த காலங்களில் 50 ரூபா வைக்கூட பெற்றுக்கொள்ளமுடியாத நிலை காணப்பட்டது. – எனக் குறிப்பிட்டுள்ளார்.

# கொரோனாத் தடுப்பூசிகளை வழங்குவதற்காக இலங்கை அனுமதிக்கு இந்தியா காத்திருப்பு!



தமது நாட்டில் தயாரிக்கப்பட்ட கொவிட் – 19 தடுப்பூசிகளை வழங்குவதற்கு தேவையான ஒழுங்குமுறை அனுமதிகளை இலங்கை உறுதிப்படுத்தும் வரையில் காத்திருப்பதாக இந்திய அரசாங்கம் தெரிவித்துள்ளது.

இந்தியாவில் தயாரிக்கப்பட்ட கொவிட் – 19 தடுப்பூசிகளை வழங்குவதற்காக அண்டை நாடுகளில் இருந்து பல கோரிக்கைகளைப் பெற்றுள்ளதாக இந்திய அரசாங்கம் கடந்த செவ்வாய்க்கிழமை தெரிவித்துள்ளது.

இந்தக் கோரிக்கையைத் தொடர்ந்து, பூட்டான், மாலைதீவு, பங்களாதேஷ், நேபாளம், மியான்மர் மற்றும் சீஷெல்ஸ் ஆகிய நாடுகளுக்கு நேற்று புதன்கிழமை முதல் மானிய உதவியின் கீழ் கொவிட் – 19 தடுப்பூசிகளை வழங்கப்போவதாகவும் இந்திய அரசாங்கம் அறிவித்துள்ளது.

இந் நிலையில் இலங்கை, ஆப்கானிஸ்தான் மற்றும் மொரீஷியஸைப் பொறுத்தவரை, தேவையான ஒழுங்குமுறை அனுமதிகளை அந் நாட்டு அரசாங்கங்கள் உறுதிப்படுத்தும் வரையில் இந்தியா காத்திருக்கிறது.

இந்தியாவின் இந்த தடுப்பூசி ஏற்றுமதித் திட்டமானது பல நடுத்தர மற்றும் குறைந்த வருமானம் கொண்ட நாடுகளுக்கு எளிதில் தடுப்பூசியைப் பெற வழி வகுக்கும்.

உலக சமூகத்தின் சுகாதாரத் தேவைகளைப் பூர்த்தி செய்வதில் நீண்டகால நம்பகமான பங்காளியாக இருப்பது இந்தியாவுக்கு மிகவும் பெருமை அளிக்கிறது என்று பிரதமர் நரேந்திர மோடி தனது டுவிட்டர் பதிவில் தெரிவித்துள்ளார்.

# மன்னாரை அதிரவைத்த கொரோனாத் தொற்று அதிகளவிலான வர்த்தக நிலையங்கள் பூட்டு!

மன்னார் மாவட்டத்தில் கடந்த சில வாரங்களாக கொரோனா தொற்றாளர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது.

இந்நிலையில் மன்னார் பஸார் பகுதியிலுள்ள வர்த்தக நிலைய உரிமையாளர்கள், பணியாளர்கள் எனப் பலருக்கு கடந்த வாரம் பி.சி.ஆர். பரிசோதனைகள் மேற்கொண்டனர்.

குறித்த பரிசோதனைகளின்போது மன்னார் நகர பகுதி மற்றும் பஸார் பகுதிகளிலுள்ள வர்த்தக நிலையங்கள் மற்றும் உணவகங்களின் உரிமையாளர்கள் மற்றும் ஊழியர்கள் அதிகளவானோருக்கு கொரோனாத்தொற்று உள்ளமை அடையாளம் காணப்பட்டுள்ளது.

இந்நிலையில் மன்னார் சுகாதார சேவைகள் பணிமனை மற்றும் சுகாதார துறையினர் இணைந்து இதுவரை பிரதான கடைத் தொகுதிகளில் சுமார் 15 வர்த்தக நிலையங்களை மூடியுள்ளதுடன் வர்த்தக நிலையங்களின் உரிமையாளர்கள் மற்றும் ஊழியர்கள் சிலர் சுய தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.

அதேநேரத்தில் அத்தியாவசிய தேவைகள் இன்றி நகர் பகுதிக்குள் வருவதையோ அல்லது கூட்டம் கூடுவதையோ தவிர்க்குமாறு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் த.விநோதன் கோரிக்கை விடுத்துள்ளார்.

மேலும் மன்னாரில் முதலாவது கொரோனா மரணம் கடந்த (செவ்வாய்க்கிழமை) பதிவாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# பாடசாலை பாட விதானங்களில் ஆயுர்வேத முறையும் இணைப்பு!

பாடசாலை பாட விதானங்களில் ஆயுர்வேத வைத்திய முறைகளை இணைத்துக்கொள்வதற்கு பரிந்துரை செய்ய சுதேச வைத்திய முறைகளின் மேம்பாடு, கிராமிய மற்றும் ஆயுர்வேத வைத்தியசாலைகள் அபிவிருத்தி மற்றும் சமூக சுகாதார அமைச்சு தீர்மானித்துள்ளது.

ஆயுர்வேத வைத்திய முறை தொடர்பாகப் பாடசாலை மாணவர்களைத் தெளிவூட்டுவதற்காக இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட உள்ளன என அமைச்சின் செயலாளர் குமாரி வீரசேகர தெரிவித்துள்ளார்.

அதன்படி உயர் தரங்களில் கல்வி கற்கும் மாணவர்களுக்கான பாட விதானங்களில் ஆயுர்வேத வைத்திய முறையை இணைத்துக்கொள்வதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

மேலும் இந்த விடயம் தொடர்பாக கல்வி அமைச்சுடன் கலந்துரையாடியுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

# ஔடதப் பாணியில் எனது அறிவுறுத்தலை பின்பற்றாமையே தொற்று ஏற்படக் காரணம்!

## தம்மிக்க விளக்கம்



பருகிய தாம் உள்ளிட்ட தமது குடும்பத்தைச் சேர்ந்த அனைவருக்கும் கொரோனா வைரஸ் தொற்று ஏற்பட்டுள்ளதாக கேகாலை பிரதேச சபையின் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பிரதிநிதியான சிலந்த விஜேபால தெரிவித்துள்ளார்.

கொரோனாவுக்கு எதிரான ஔடத பாணியை தாம் கூறியவாறு பருகியிருந்தால், ஒருவருக்கும் கொரோனா தொற்று ஏற்படாது என கேகாலையைச் சேர்ந்த தம்மிக்க பண்டார தெரிவித்துள்ளார்.

கேகாலையைச் சேர்ந்த தம்மிக்க பண்டார என்பவரால் கொரோனா வைரஸுக்கு எதிராகத் தயாரிக்கப்பட்டுள்ளதாகக் கூறப்படும் ஔடத பாணியை பருகிய சில பேருக்கும் கொரோனா வைரஸ் தொற்று உறுதியாகியுள்ளது.

குறிப்பாக தம்மிக்க பண்டார கூறியவாறு, அனைத்து முறைகளையும் பின்பற்றி பாணியை

இந்த நிலையில், இந்த விடயம் தொடர்பாக ஊடகமொன்றுக்குக் கருத்து வெளியிடும்போதே, தாம் கூறியவாறு ஔடதப் பாணியைப் பருகியிருந்தால் கொரோனா ஏற்பட்டிருக்காது எனதம்மிக்க பண்டார தெரிவித்துள்ளார்.

இதேவேளை, மருத்துவர் அல்லாத ஒருவர் இவ்வாறான கருத்துக்களை வெளியிடும்போது பொது மக்கள் அவதானத்துடன் இருக்க வேண்டும் என அரச ஆயுர்வேத மருத்துவ அதிகாரிகள் சங்கம் கருத்து தெரிவித்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

நேற்று முன்தினம் ' 'தினமணி' நாளிதழில் வெளியான கட்டுரையின் மறுபிரசுரம் இது. நேற்றைய தொடர்ச்சி இங்கு பிரசுரமாகின்றது.

**கே.எஸ். இராதாகிருஷ்ணன்**
(வழக்கறிஞர், அரசியல் செயற்பாட்டாளர்)



# இந்தியாவை ஏமாளியாக நினைக்கும் இலங்கை!

## புதுடில்லி அதை எப்போது உணரும்?

இந்து மகா சமுத்திரம் குறித்த குறிப்புகள் வருமாறு:-

1. இந்தியப் பெருங்கடலின் பெரும்பகுதியை சீனாவின் தூண்டுதலால் சிங்கள அரசு கைப்பற்றத் துடிக்கிறது. இதுகுறித்தான ஆவணங்கள் தற்போது வெளிவந்துள்ளன. ஐ.நா.வில் சிங்கள அரசு, இந்து மகா சமுத்திரத்தின் பெரும்பகுதியை தன் நிலத்திற்கு சொந்தமென உரிமை கோரி மனு அளித்துள்ளது.

இந்தியப் பெருங்கடலில் இலங்கையின் ஆதிக்கம் தற்போது ஏறத்தாழ 200 மைல்கள் உள்ளதை 350 மைல்களாக அதிகரிக்க வேண்டி ஐ.நா.மன்றத்தில் முறையிட்டுள்ளது. இதைக் கடுமையாக எதிர்க்க வேண்டிய இந்தியாவோ வாய்மூடி மௌனியாகவே இருந்து வருகிறது.

இப்படியான சிக்கலில், ஏதாவதொரு போர் மூளும் அபாயம் ஏற்பட்டால் நேரடியாக கேரளம், தமிழகம்; குறிப்பாக குமரி முனையிலிருந்து இராமேஸ்வரம், நாகை வரை உள்ள கடற்கரைப் பகுதிகளுக்கும், நாட்டின் பாதுகாப்பில் பாதகம் ஏற்படும்.

இது தமிழகத்தின் வாழ்வாதார, பாதுகாப்பு பிரச்சினை. இலங்கையின் இந்த கோரிக்கை விசாரிக்கப்பட்டு, இறுதித் தீர்ப்புக்காக அடுத்த ஐ.நா. அமர்விற்கு தள்ளிப்போட்டுள்ளது. இதே மாதிரியான மனுவை இந்திய அரசும் ஒரு முறை ஐ.நாவில் கொடுத்ததாகத் தகவல்கள் உள்ளன. சிங்கள தேசம் கைப்பற்ற துடிப்பது குமரிக் கண்டத்தின் இந்தியப் பெருங்கடலின் பெரும் நீர் பரப்பையே.

2. இலங்கையில் கடந்த சில மாதங்களாக அதிபர் மைத்திரிபால சிறிசேனா ஆடிய ஆட்டங்களுக்கு அளவில்லை. அதை கண்டித்த உலக நாடுகளுக்கு மத்தியில் இந்தியா அந்த பிரச்சினைகளை கவனித்து வருவதாக கூறியது அதிர்ச்சியைத் தந்தாலும் இந்த வியத்தில் இந்தியா கமுக்கமாகவே உள்ளது.

ஏற்கனவே கச்சத்தீவு இலங்கைக்கு வழங்கப்பட்டு, இலங்கை இராணுவத்தால் தமிழக மீனவர்கள் சுட்டுக் கொல்லப்பட்டும், கைது செய்யப்பட்டும் தங்களின் வாழ்வாதாரத்தை இழந்தார்கள். இப்போது இலங்கை, இந்தியாவின் பாதுகாப்புக்கு மேலும் சிக்கலை ஏற்படுத்தும் வகையில் சீனாவின் துணையுடன் இந்து மகா சமுத்திரத்தில் தனது ஆளுமையை ஏறத்தாழ 350 மைல்களுக்கு விரிவாக்க வேண்டி முறையிட்டுள்ளது. வழக்கமாக சர்வதேச கடல் பகுதியில் ஒரு நாட்டின் ஆளுமையானது 200 மைல் தொலைவுக்குத் தான் இயங்க முடியும். இது சர்வதேச சட்டங்களுக்கு விரோதமானது. இந்த நிலை எதற்கு என்றால் இந்தியப் பெருங்கடலில் இந்தியாவை அச்சுறுத்தவே சீனா இலங்கையை பகடைக் காயாக பயன்படுத்துகிறது.

3. அமைதி மண்டலமான இந்து மகா சமுத்திரத்தில் சீனாவின் ஆதிக்கம் நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டிருக்கிறது.

4. ஒரு பக்கத்தில் சீசல்ஸின் டீகோகார்சியா பிரிட்டன் மூலமாக குத்தகைக்கு எடுத்து அமெரிக்க இராணுவத் தளம் அமைக்க இருக்கிறது. பிரான்ஸும், ரஷ்யாவும் இந்த கடலில் தனது ஆதிக்கத்தை செலுத்த திட்டங்களை தீட்டியுள்ளன. பெயருக்குத்தான் இந்தியப் பெருங்கடல். நம்முடைய கண்காணிப்பையும் மீறி இலங்கையின் தயவால் அமெரிக்காவும், சீனாவும் வியாபாரத்திற்காகவும், தனது போர்க் கப்பல்களை எல்லாம் அங்கு நிறுத்தவும் மட்டுமல்லாமல் கடற்படை பயிற்சிகள் நடப்பதாக செய்திகள் வருகின்றன. கச்சத்தீவு வரை சீனாவின் தேசியக் கொடிகள் பறந்தன. தற்போதைய நிலையில் நமது அண்டை நாடுகளான பாகிஸ்தான், மியான்மர், நேபாளம், இலங்கை, வங்கதேசம் போன்றவற்றுடன் நல்ல ஒருங்கிணைப்பான உறவுகள் இந்தியாவிற்கு இல்லாமல் இருப்பது அனைவரும் அறிந்ததே. மாலைதீவு மட்டும் இந்தியாவிற்கு ஆதரவாகவும், எதிராகவும் சூழலுக்கேற்றவாறு நடந்து கொள்கிறது.

5. இந்தியப் பெருங்கடல் என்று பெயர் இருந்தாலும், நமது கட்டுப்பாட்டையும் மீறி நாளுக்கு நாள் அயலார்களுடைய அத்துமீறலும் வல்லரசுகளின் வல்லாதிக்கமும் அதிகரித்துக்கொண்டே இருக்கிறது.

6. அமைதி மண்டலமாக இருந்த இந்த கடல் அயல் நாடுகளின் ஆதிக்கத்தால் எதிர்காலத்தில் புவி அரசியலில் பெரும் குழப்பங்களை உருவாக்கும் கடல் மண்டலமாக ஆகிவிடுமோ என்ற ஐயப்பாடு ஏற்படுகிறது.

7. நேரு காலத்தில் வடக்கேயும், வடகிழக்கிலும் சீனாவுடன் போர் நடந்தது. அவர் காலத்திற்குபின் வடமேற்கில் பாகிஸ்தானுடன் போர் நடந்தது. தெற்கே இந்து மகா சமுத்திரத்தில் இம்மாதிரியான நெருக்கடியில் போர் மூளும் என்ற அச்சம் தற்போதுள்ள சூழலில் ஏற்படுகின்றது. அப்படி போர் மூண்டால் கூடங்குளம், மகேந்திரகிரி, தும்பா, ஐஎன்எஸ் கட்டபொம்மன், தூத்துக்குடி ஆலைகள், கல்பாக்கம் வரை தாக்குதல் நடத்தினால் பெரும் துயர விளைவுகள் ஏற்பட்டுவிடலாம். எனவே இதை முன்கூட்டியே தடுக்கக் கூடிய வகையில் இந்து மகா சமுத்திரத்தில் இந்தியாவின் இறையாண்மை காக்கக் கூடிய நிலையில் அயல்நாட்டுடைய அத்துமீறலை கண்காணித்து உரிய நடவடிக்கைகள் எடுக்க வேண்டும். இல்லையென்றால் தென் மாநிலங்களுக்கு பெரும் ஆபத்து எதிர்காலத்தில் ஏற்படக்கூடிய சூழல் வரலாம்.

8. பண்டித நேரு தென் தமிழகம் அமைதியான பகுதி என்று நினைத்துதான் இராணுவத் தளவாடங்களை உற்பத்தி செய்யும் தொழிற்சாலைகளை தென்மாநிலங்களில் அமைத்தார். ஏனெனில் வடமாநிலங்களுக்கு பாகிஸ்தான், சீனா ஆகியவற்றால் போர்ப் பிரச்சினை ஏற்படும் என்று எண்ணினார். ஆனால் இன்றைக்கு நிலைமைகள் மாறி இந்து மகா சமுத்திரத்தால் இந்தியாவிற்கு கேடுகள் வரக்கூடிய அபாயங்கள் கண்ணில்படுகின்றன. இத்தகைய ஆபத்துகள் ஏற்படாமல் தற்காத்துக் கொள்வது அவசரமும், அவசியமான பணியாகும். டீகோகார்சியா தீவில் பிரிட்டன், அமெரிக்காவும் இராணுவத் தளங்களை அமைக்க வேண்டும் என்று 1969 இருந்து முயற்சிகள் மேற்கொண்டுள்ளனர். இந்திரா காந்தி பிரதமராக இருந்த காலத்தில் இந்தியா, சோவியத் நாட்டின் ஆதரவுடன் கடுமையாக எதிர்த்ததால் இாணுவத் தளங்கள் அமைக்க முடியவில்லை.

9. அப்போது, அமெரிக்கா, தனது இராணுவத் தளத்தை அமைப்பதற்காக, டீகோகார்சியா தீவில் வசித்துக் கொண்டிருந்த 2,000க்கும் மேற்பட்ட மொரீசியஸ் நாட்டினர் வெளியேற்றப்பட்டனர். அந்தத் தீவுக்கு மொரீசியஸ் உரிமை கொண்டாடி வரும் நிலையில், அமெரிக்காவுடனான குத்தகைக் காலம், சமீபத்தில் காலாவதியானது.

எனினும், அமெரிக்காவுடனான குத்தகையை, வரும் 2036ஆம் ஆண்டு வரை பிரிட்டன் புதுப்பித்துள்ளது. இதனால், அதிர்ச்சியடைந்துள்ள மொரீசியஸ் அரசு இந்த விவகாரத்தை சர்வதேச நீதிமன்றத்துக்குக் கொண்டு செல்ல முடிவெடுத்துள்ளது. இந்தியப் பெருங்கடலில் ஆபிரிக்க கொள்ளைக்காரர்களின் நடமாட்டமும் நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது.

இதனால் அரபிக் கடலிலும், வங்கக் கடலிலும் பாதுகாப்பற்ற, மோசமான புவி அரசியல் நிலை ஏற்படும். இந்தியப் பெருங்கடல் பிரச்சினையில் இயற்கை துறைமுகமான திருகோணமலை துறைமுக சிக்கலையும் நாம் கவனித்தாக வேண்டும்.

10. திருகோணமலை துறைமுகம் தென்கிழக்கு ஆசியாவின் ஒரு கேந்திர மையமாகும். ஆழ்கடல், வர்த்தகம், தொழில் போன்றவைகளுக்கு ஆஸ்திரேலியாவின் சிட்னி துறைமுகம் போல இந்த திருகோணமலை துறைமுகம் அமைந்துள்ளது. அமெரிக்கா, பிரிட்டன், ரஷ்யா, சீனா போன்ற நாடுகள் திருகோணமலை துறைமுக்த்தில் இடம்பெறத் துடிக்கின்றன. ஏற்கனவே அமெரிக்கா 1970களில் வொய்ஸ் ஒவ் அமெரிக்காவும், எண்ணெய் கிடங்குகளும் அமைக்க, இந்த துறைமுகத்தை கைப்பற்ற கழுகுப் பார்வையில் இருந்தது. ஜப்பானும் இந்த துறைமுகத்தின் மேல் ஒரு கண் வைத்திருந்தது. இதற்கான நில அமைப்பை கொண்ட திருகோணமலை எதிர்காலத்தில் முக்கியத்துவம் பெறும். இந்திரா காந்தி காலத்திலிருந்து திருகோணமலை துறைமுகத்தையும் நிலஅமைப்பு ரீதியாக கவனித்தும் வருகிறது. இந்த துறைமுகத்துடன் இந்து மகா சமுத்திரத்தின் பாதுகாப்பையும் உள்ளடக்கியதாகும்.

11. இத்தோடு இலங்கையில் உள்ள ஹம்பாந்தோட்டை துறைமுக விவகாரத்தையும் இந்தியா கவனிக்க வேண்டியுள்ளது. தென் இலங்கையின் ஹம்பாந்தோட்டை துறைமுக 85 வீதப் பங்குகள் சீனாவிற்கு விற்க ஒப்பந்தம் கையெழுத்தாகி உள்ளது. இலங்கை இறுதி யுத்தத்திற்கு பிறகு தற்போது அங்கு செய்யப்பட்டு வரும் கட்டுமான வேலைகள் சீனாவின் முதலீடு அதிகளவில் உள்ளது. ஹம்பாந்தோட்டை துறைமுக கட்டுமான பணிகளுக்கு சீனாவின் முதலீடு தொடர்பாக இரு நாடுகளும் பேச்சுவார்த்தை நடத்தியதன் விளைவாக ஓர் ஒப்பந்தம் கையெழுத்தானது. இந்த ஒப்பந்தத்தின் அடிப்படையில் சீன அரசின் துறைமுக வணிக குழுமத்திற்கு ஹம்பாந்தோட்டை துறைமுகத்தின் 70 சதவீத பங்குகளை குத்தகை அடிப்படையில் 99 வருடங்களுக்கு இலங்கை அரசு அளிக்கிறது. இந்த ஒப்பந்தத்தின்படி ஹம்பாந்தோட்டை துறைமுகம் சார்ந்த பணிகளில் 1.1 பில்லியன் டொலர்கள் (இந்தியப் பணத்தில் 6,500 கோடி ரூபா) சீனா முதலீடு செய்கிறது. ஏற்கனவே இந்த துறைமுகத்தில் சீனாவின் ஆதிக்கம் இந்தியாவின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்படுமென்ற இந்தியாவின் கவலையை மீறி, இலங்கை துறைமுகம் மற்றும் கப்பல் போக்குவரத்து துறை அமைச்சர் மற்றும் இலங்கைக்கான சீன தூதர் ஆகியோர் முன்னிலையில் முறைப்படி ஒப்படைக்கப்பட்டது. இந்த ஒப்பந்தத்தின்படி துறைமுக பாதுகாப்புக்கு இலங்கை கடற்படையே பொறுப்பு எனவும், அங்கு தளம் அமைக்க எந்த வெளிநாட்டு கடற்படைக்கும் அனுமதி இல்லை என்று கூறப்படுகிறது. இந்நிலையில் சீனாவின் நீர்மூழ்கிக் கப்பல்களும், போர்க்கப்பல்களும் கொழும்பு துறைமுகத்தில் நிறுத்தப்பட்டிருக்கின்றன. அதேபோல மேலை நாட்டு போர்க்கப்பல்களின் நடமாட்டங்களும் இந்து மகா சமுத்திரத்தில் இருப்பதாக செய்தி வருகிறது.

12. HSBC World in Forecast 2050 நடத்திய கணிப்பில், 2050இல் ஆசியாவின் 19 நாடுகளே உலகின் பொருளாதாரத்தை ஆளுகை செய்ய இருக்கின்றன என்றும், 2017இல் வெளியான Price Water House Coopers (PWC) அறிக்கையில் இந்தியா, சீனா, மலேசியா உள்ளிட்ட நாடுகளே இந்தியப் பெருங்கடலை நோக்கிய பொருளாதாரத்தில் ஆளுகை செலுத்தும் எனவும் சுட்டிக் காட்டப்பட்டிருந்தது. உலகமயமாக்கல் என்ற நிலையில் எதிர்காலத்தில் இந்தியப் பெருங்கடல் பல்வேறு நாடுகளின் கேந்திரப் பகுதியாகும் பட்சத்தில் பெரும் அபாயங்கள் நேரலாம்.

13. அமெரிக்காவும், இந்தோ - பசிபிக் கட்டுப்பாட்டு மையத்தை மாற்றி இந்தியப் பெருங்கடலை அதோடு 2018இல் இணைத்து இந்தியாவை தன் வலைக்குள் போட்டுக்கொண்டது. இந்தியப் பெருங்கடலில் 13 முக்கிய கேந்திரத் துறைமுகங்கள் உள்ளன. கடல்சார் வணிக போக்குவரத்து, எண்ணெய் உற்பத்தி போன்ற பணிகளுக்கு உலக நாடுகளிடையே இந்த கடலில் போட்டிகள் உள்ளன.

14. தற்போதைய நிலையில் இந்தியா எதிரிகளால் சூழப்பட்டுள்ளது. நமக்கு நம்முடைய அண்டை நாடுகளான பாகிஸ்தான், சீனா, நேபாளம், மியான்மர், வங்கதேசம், இலங்கை என யாருடனும் சுமூகமான நட்புறவு இல்லை. இத்தகைய நிலையில் மாலைதீவில் மட்டும் சுமூகமான உறவுள்ளது. இந்திய பிரதமர் மோடி மாலைதீவு வளர்ச்சிக்கு வழங்கிய கடனும் ஒரு காரணமாக இருக்கலாம். இப்படியான முக்கியத்துவம் வாய்ந்த இந்தியப் பெருங்கடலை இந்தியா கவனிக்காமல் புறக்கணித்தால் என்ன செய்ய?

வல்லரசாக வேண்டும். ஐ.நா. பாதுகாப்பு கவுன்ஸிலில் நிரந்தர உறுப்பினர் ஆகவேண்டும் என்று நினைக்கும் நாம் நம் நாட்டின் தெற்கு எல்லையில் உள்ள நமது கடல் ஆதிக்கத்தை இழக்கலாமா?

இதை எல்லாம் இந்திய அரசு கவனத்தில் கொண்டு இலங்கையில் பேசவும் மட்டுமல்லாமல் ஈழத் தமிழர்களின் உரிமை, இந்தியாவின் பாதுகாப்பை, இந்து மகா கடலில் இந்தியாவின் உரிமையை நிலை நாட்டவேண்டும். வெறும் பயணங்கள், பேச்சுவார்த்தை சம்பிரதாயங்கள் கடந்த நாற்பது ஆண்டுகளாக நடப்பதில் எந்தப் பயனும் இல்லை.

**(11ஆம் பக்கம் பார்க்க)**

காலைக்கதிர் Kalaikkathir

# வெளிநாடுகளில் பணிபுரியும் இலங்கையர்களின் உறவினர்கள் கொழும்பில் நேற்று ஆர்ப்பாட்டம்





வெளிநாடுகளில் பணிபுரியும் இலங்கையர்களை மீண்டும் நாட்டுக்குத் திருப்பியழைத்து வருவதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என வலியுறுத்தி நேற்று செவ்வாய்க்கிழமை முற்போக்கு பெண்கள் ஒன்றியத்தால் ஆர்ப்பாட்டமொன்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

கொழும்பிலுள்ள வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்துக்கு முன்பாக மேற்கொள்ளப்பட்ட இந்த ஆர்ப்பாட்டத்தில் முற்போக்கு பெண்கள் ஒன்றியத்தின் உறுப்பினர்கள், வெளிநாடுகளில் பணிபுரியும் இலங்கையர்களின் உறவினர்கள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டிருந்தனர்.

ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்டவர்கள் 'நாட்டின் பாரத்தைச் சுமக்கும் புலம்பெயர் பணியாளர்களைக் கைவிடாதிருப்போம்', 'வெளிநாடுகளில் பணிபுரியும் ஊழியர்கள் சுரண்டப்படுவது நிறுத்தப்பட வேண்டும்' என்பது போன்ற வாசகங்கள் எழுதப்பட்ட பதாகைகளை ஏந்தியிருந்தனர்.

## கொரோனா தொற்றில் இருந்து தயாசிறி ஜயசேகர குணமடைவு!



கொரோனா தொற்று உறுதியான இராஜாங்க அமைச்சர் தயாசிறி ஜயசேகர குணமடைந்துள்ளார் என அறிவிக்கப்பட்டுள்ளது.

ஜனவரி 8 ஆம் திகதி கொரோனாத் தொற்று அவருக்கு உறுதி செய்யப்பட்டமையை அடுத்து ஹிக்கடுவ சிகிச்சை நிலையத்தில் சேர்க்கப்பட்டார்.

இந்நிலையில் நேற்று (புதன்கிழமை) அவர் வீடு திரும்பியுள்ளார் எனவும் கொரோனாத் தொற்றில் இருந்து சுகம்பெற மருந்தாக எந்த சிரப்பையும் உட்கொள்ளவில்லை என்றும் அறிவித்துள்ளார்.

## வாழைச்சேனையில் குடும்பஸ்தர் வீதியில் சடலமாக கண்டெடுப்பு!

வாழைச்சேனை - கறுவாக்கேணி குறுக்கு வீதியோரத்தில் குடும்பஸ்தர் ஒருவர் சடலமாக நேற்று (புதன்கிழமை) கண்டெடுக்கப்பட்டுள்ளார்.

வாழைச்சேனை கறுவாக்கேணி பிரதான வீதியில் வசிக்கும் நான்கு பிள்ளைகளின் தந்தையான வேலாயுதபிள்ளை தங்கராசா (வயது 59) என்பவரே உயிரிழந்தவர் என அடையாளம் காணப்பட்டுள்ளார். சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது -

இந்த நபர் தனது கறுவாக்கேணி பாரதி வீதியிலுள்ள வீட்டுக்குச் சென்று வருவதாகக் கூறி சென்றுள்ளார். ஆனால் அவர் நீண்ட நேரமாக வீட்டுக்குத் திரும்பாத நிலையில் குடும்பத்தினர் தேடிச் சென்று பார்த்தபோது, வீதியோரத்தில் விழுந்த நிலையில் சடலமாக காணப்பட்டமையையடுத்து, வாழைச்சேனை பொலிஸாருக்குத் தெரிவித்துள்ளனர்.

அதனைத் தொடர்ந்து சம்பவ இடத்திற்கு வருகை தந்த திடீர் மரண விசாரணை அதிகாரி எம்.எஸ்.எம்.நசீர் விசாரணைகளை மேற்கொண்ட நிலையில், பிரேத பரிசோதனைக்காக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு சடலம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

குறித்த மரணம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை வாழைச்சேனை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## பாதுகாப்பு இராஜாங்க அமைச்சில் பலருக்குக் கொரோனாத் தொற்று!

பாதுகாப்பு இராஜாங்க அமைச்சில் பலருக்குக் கொரோனா தொற்று இருக்கின்றமை உறுதி செய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இதனை அடுத்து அமைச்சில் அடையாளம்காணப்பட்ட நோயாளிகளுடன் தொடர்புடையவர்கள் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.

இருப்பினும் தொடர்ந்தும் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சு திறந்து இருப்பதாகவும் செய்திகள் வெளியாகியுள்ளன.

இதேவேளை கடந்த வாரம் சுகாதார அமைச்சில் 08 பேருக்குக் கொரோனாத் தொற்று உறுதியானமையோடு அவர்களுடன் தொடர்புடைய 74 பேர் தனிமைப்படுத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## தேசிய உற்பத்தியாளர்களை பாதிக்கும் எதனையும் இறக்குமதி செய்யமாட்டோம்!

### அரசு திட்டவட்டம் என்கிறார் பந்துல



நல்லாட்சி அரசாங்க காலத்தில் நாட்டின் தேசிய உற்பத்தியாளர்கள் பாதுகாக்கப்படவில்லை. ஆனால், உள்நாட்டு உற்பத்தியாளர்களுக்கும் தேசிய பொருளாதாரத்துக்குமே ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையிலான அரசாங்கம் முன்னுரிமையளித்து செயற்படுகின்றது என வர்த்தக அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற நிதி அமைச்சின் கீழ் இருக்கும் விசேட வியாபார பண்ட அறவீட்டு சட்டத்தின் கீழ் கட்டளை மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு தொடர்ந்து தெரிவிக்கையில் -

நுகர்வோருக்கும் உற்பத்தியாளருக்கும் நெருங்கிய தொடர்புகள் உள்ளன. சில சந்தர்ப்பங்களில் உற்பத்தியாளர்கள் பற்றி மாத்திரமே கதைக்கின்றோம்.

அதேபோன்று சில சந்தர்ப்பங்களில் நுகர்வோர் பற்றி மாத்திரமே கதைக்கின்றோம். உற்பத்தியாளர்கள் தமது உற்பத்திக்கு அதிக விலை கிடைப்பதையே எப்போதும் எதிர்பார்ப்பார்கள். உற்பத்தியாளர்களைவிட எமக்கு வாக்களிக்கும் நுகர்வோர்தான் அதிகமாகும்.

நுகர்வோர் எப்போதும் குறைந்த விலையில் பொருள்களை பெற்றுக்கொள்ளவே எதிர்பார்க்கின்றனர். இரண்டு தரப்பினருக்கும் இடையில் ஒரு பிரச்சினையுள்ளது.

இருதரப்பினரையும் பாதுகாக்கும் வகையில்தான் அரசாங்கம் வரிக்கொள்கையை நடைமுறைப்படுத்த வேண்டும். அதன் பிரகாரம்தான் விசேட வியாபாரப் பண்டங்களுக்கான வரி முறைமை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

தேவையான நேரத்தில் குறித்த சட்டத்தை மறுசீரமைக்க முடியும் என்பதுடன், சட்டம் திருத்தப்பட்டு ஆறு மாதகாலத்துக்கு நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டு நிறைவேற்றிக்கொள்ள வேண்டும்.

மேலும் சுதேச உற்பத்தியாளர்களைப் பாதுகாக்கும் நோக்கிலேயே விசேட வியாபாரப் பண்டங்களுக்கான வரிமுறைமை 2007 ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்டது. எந்த அரசாங்கம் ஆட்சியில் இருந்தாலும் இந்த நாட்டின் லட்சக்கணக்கான விவசாயிகளைப் பாதுகாக்க வேண்டியது கடமையும் பொறுப்புமாகும்.

ஆனால், கடந்த நல்லாட்சி அரசாங்கத்தின் காலத்தில் நாட்டின் தேசிய உற்பத்தியாளர்கள் பாதுகாக்கப்படவில்லை. ரிஷாத் பதியுதீன்தான் வர்த்தக அமைச்சராக இருந்தார்.

தேசிய உற்பத்தியாளர்களைக் கவனத்தில் கொள்ளாது வெளிநாடுகளில் இருந்து பொருள்களைக் கொண்டுவந்து குறைந்த விலையில் கொடுத்தார்.

75, 80 ரூபாவுக்கு இடையில் பொன்னி, சம்பா அரிசி இறக்குமதி செய்து முழுச் சந்தையையும் நிறைக்க முடியும். இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்ய முடியும். வரி இல்லாது அரிசி விலையை குறைக்க முடியும். ஆனால், எமது நாட்டில் தற்போது அறுவடை காலமாகும்.

மண்ணுடன் முட்டி மோதும் அவர்களுக்கு கடனைக்கூட செலுத்திக்கொள்ள முடியாத சூழல் ஏற்படும். ஆனால், ஜனாதிபதி கோட்டாய ராஜபக்ஷவின் அரசாங்கம் 'சுபீட்சமான நோக்கு' என்ற கொள்கைக்கு அமைய தேசிய பொருளாதாரத்துக்கே முக்கியத்துவம் கொடுக்கும்.

அதனால் எத்தகைய விமர்சனங்கள் வந்தாலும் நாம் லட்சக்கணக்கான விவசாயிகளின் பக்கம் நின்றுதான் தீர்மானங்களை எடுப்போம். மஞ்சள், கஜு, உழுந்து, மிளகு என எதனையும் இறக்குமதி செய்ய மாட்டோம். நாட்டில் உற்பத்தி செய்யக்கூடிய அனைத்தையும் உற்பத்தி செய்வதற்கான சலுகைகளை விவசாயிகளுக்கு செய்து கொடுப்போம்.

வடக்கு, கிழக்கில் உழுந்து, சோயா, மஞ்சள் என பல உற்பத்திகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இவ்வாறு தேசிய பொருளாதாரம் வளர்ச்சியடையும் போதே எமது நாட்டின் நிதிபலம் அதிகரிக்கும் என்பதுடன், மக்களின் வாழ்க்கைத்தரமும் உயர்வடையும். - என்றார்.

## தலதா மாளிகைப் பொலிஸாருக்குக் கொரோனா வந்தமைக்கு உக்ரேன் பயணிகள் காரணமல்லர்!



தலதா மாளிகையில் பொலிஸ் உத்தியோகஸ்தர்களுக்கு கொவிட் தொற்று ஏற்பட்டமைக்கு உக்ரேன் சுற்றுலா பிரயாணிகள் காரணமல்லர். அவர்கள் அங்கு செல்வதற்கு முன்னரே குறித்த பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு தொற்று ஏற்பட்டுள்ளது என்று அமைச்சரவைப் பேச்சாளர் கெஹெலிய ரம்புக்வெல்ல தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெளிவுபடுத்துகையில் -

உக்ரேனிலிருந்து வந்த சுற்றுலா பயணிகள் தலதா மாளிகைக்கு செல்வதற்கு முன்னரே அங்குள்ள பொலிஸ் உத்தியோகஸ்தர்களுக்கு தொற்றுறுதி செய்யப்பட்டுள்ளது. இதனை தலதா மாளிகை நிர்வாகத்தினரிடமிருந்து நான் உறுதிப்படுத்திக் கொண்டேன். எனவே, இந்த விடயத்தில் அநாவசியமாக அவர்களைத் தொடர்புபடுத்த வேண்டிய தேவை கிடையாது. - என்றார்.

## ஐம்பொன் புத்தர் சிலையை விற்க முயன்ற மூவர் முல்லையில் கைது!



முல்லைத்தீவில் ஐம்பொன்

புத்தர் சிலையை விற்பனை செய்ய முயன்ற ஹற்றனைச் சேர்ந்த மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதன்போது ஆறு கிலோ நிறையுடைய ஐம்பொன் புத்தர் சிலையை சிறப்பு அதிரடிப் படையினர் கைப்பற்றியுள்ளனர்.

இந்நிலையில் கைது செய்யப்பட்டுள்ள சந்தேகநபர்களிடம் மேலதிக விசாரணைகளை முல்லைத்தீவு பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# இராணுவப் பயிற்சி நாட்டின் எதிர்காலத்தைக் குழப்பும்!

## ஹசன் அலி குற்றச்சாட்டு

18 வயதுக்கும் மேற்பட்ட அனைவருக்கும் இராணுவப் பயிற்சியளிக்கப்பட வேண்டும் என்று முன்வைக்கப்பட்டுள்ள யோசனையானது மிகவும் ஆபத்தானதாகும். இதன் மூலம் எதிர்காலத்தில் நாடு குழப்ப நிலைக்கு முகங்கொடுக்கக் கூடும் என்று முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் ஐக்கிய சமாதான கூட்டமைப்பின் செயலாளர் நாயகமுமான ஹசன் அலி தெரிவித்தார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில் -

பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சரான சரத் வீரசேகர ஒழுக்கமுடைய சமூகமொன்றை உருவாக்குவதற்காக 18 வயதுக்கு மேற்பட்டோருக்கு இராணுவ பயிற்சியளிப்பதற்கான யோசனையை நாடாளுமன்றத்தில் முன்வைக்கவுள்ளார் எனக் கூறியிருக்கிறார். இது நாட்டுக்கு மிகவும் ஆபத்தான விடயமாகும்.

இவ்வாறான செயற்திட்டங்களின் ஊடாக இராணுவத் தன்மையிலான சிந்தனை நாட்டில் குழப்ப நிலைமையை ஏற்படுத்தும். எனவே, இது போன்ற பயிற்சிகளை வழங்குவதற்கு முன்னர் இலங்கையில் இனங்களுக் கிடையிலான நல்லிணக்கத்தை ஏற்படுத்த அரசாங்கம் முயற்சிக்க வேண்டும்.

இராணுவப் பயிற்சி மூலம் சிறந்த தலைமைத்துவத்தை உருவாக்க முடியும் என்று கூறுகிறார்கள். ஆனால், இராணுவப் பயிற்சியை நிறைவு செய்து தற்போது உயர் அதிகாரங்களில் இருப்பவர்கள் பல்வேறு முரண்பட்டுக் கொண்டிருப்பதை நாம் அவதானித்துக் கொண்டு தான் இருக்கின்றோம். சாதாரணமாக வாழ்ந்து கொண்டிருப்பவர்களுக்கு ஆயுதப் பயிற்சியை வழங்குவது நாட்டுக்கு ஆபத்தானது. - என்றார்.

# தமிழர்களின் மரபுரிமைகளை திட்டமிட்டு அழிக்கும் அரசு!

## செல்வம் எம்.பி. காட்டம்



தமிழ் மக்களின் மரபுரிமைகளையும் அடையாளங்களையும் திட்டமிட்டு அழிக்கும் வகையில் அரசாங்கத்தால் முன்னெடுக்கப்பட்டுவரும் செயற்பாடுகளின் ஓரங்கமாகவே குருந்தூர் மலைப்பகுதியில் பௌத்த விகாரைகள் காணப்பட்டன எனக் குறிப்பிட்டு அகழ்வாராய்வு ஆரம்பிக்கப்பட்டுள்ளமையை கருதவேண்டியுள்ளது என்று தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்தார்.

அத்தோடு இந்த அகழ்வாராய்வுப் பணிகள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்படுமாயின், அதில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் விரிவுரையாளர்களும் மாணவர்களும் கட்டாயமாக உள்வாங்கப்பட வேண்டும் என நாடாளுமன்றத்தில் வலியுறுத்த விருப்பதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டார். இதுபற்றி அவர் மேலும் கூறியவை வருமாறு:-

நாங்கள் கடந்த ஞாயிற்றுக் கிழமை மாலை குருந்தூர் மலை அடிவாரத்திற்குச் சென்றிருந்தோம். அங்கு எம்மை பொலிஸார் அனுமதிக்கவில்லை. அமைச்சர் ஒருவர் அங்கு வருகை தருவதற்குரிய அனைத்து ஏற்பாடுகளும் அங்கு செய்யப்பட்டிருந்தன. இராணுவத்தினரும் பொலிஸாரும் அங்கு பிரசன்னமாகியிருந்தனர். அங்கு தைப் பொங்கல் தினத்தன்று மக்கள் தமிழர் முறைப்படி பண்டிகையைக் கொண்டாடியிருந்த நிலையில், அந்தப் பகுதிகளை தொல்பொருள் திணைக்களத்தின் அதிகாரிகள் அடையாளப்படுத்திக்கொண்டிருந்தனர். அமைச்சர் வருகை தந்து அதனைப் பார்வையிட இருப்பதாகக் கூறினார்கள்.

அதுமாத்திரமன்றி கொழும்புப் பல்கலைக்கழக மாணவர்கள் அங்குவந்து தங்கியிருந்து ஆராய்வுகளை முன்னெடுக்கவிருப்பதாகவும் எமக்குத் தகவல்கள் கிடைத்தன. பேராதனைப் பல்கலைக்கழக மாணவர்களும் அந்தப் பகுதியை ஆராய விருப்பதாகக் கூறப்படுகிறது. எனினும் இந்தப் பணியில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக விரிவுரையாளர்களும் மாணவர்களும் இணைந்து செயற்படுகின்றபோது, அதில் வெளிப்படைத்தன்மை பேணப்படும் என்பதே எமது அபிப்பிராயமாகும்.

மேலும், நாம் மௌனம் சாதிக்கும் பட்சத்தில் எமது மண்ணும், நிலங்களும், பூர்விக மரபுரிமைகளும் முற்றுமுழுதாக அபகரிக்கப்பட்டு வரலாறு சிதைக்கப்பட்டுவிடும். ஆகவே, யாழ்.பல்கலைக்கழகத்தில் ஸ்தாபிக்கப்பட்டிருந்த முள்ளிவாய்க்கால் நினைவுத்தூபி இடித்து அகற்றப்பட்டபோது தமிழ், முஸ்லிம் சமூகங்கள் ஒன்றிணைந்து குரல் கொடுத்தமையைப்போன்று இந்தச் செயற்பாட்டுக்கு எதிராகவும் அனைத்து சமூகங்களும் ஒன்றிணைந்து குரல் எழுப்பவேண்டும். - என்றார்.

# வெளிவிவகார அமைச்சின் விடயதானத்தில் சர்வதேச ஒத்துழைப்புக்களுக்கான அலகு!

ஆசியாவை மையமாகக் கொண்டு வளர்ந்து வரும் பொருளாதாரப் பின்னணிக்கு ஏற்ப உலகளாவிய பொருளாதார மற்றும் அரசியல் சூழல் மாற்றமடைந்து வரும் வேளையில் வலுவான பொருளாதார இராஜதந்திர அணுகுமுறைகளைப் பெற்றுக்கொள்வதற்காக முக்கிய அனைத்து நிறுவனங்களின் நடவடிக்கைகளை ஒருங்கிணைப்பு செய்வதற்காகவும் பொருளாதார இராஜதந்திர விடயங்களுக்கு ஏற்புடைய கொள்கை வகுப்புக்களுக்காகவும் பிறிதோர் அலகை வெளிவிவகார அமைச்சின் கீழ் நிறுவுவதற்கான தேவை கண்டறியப்பட்டுள்ளது.

அதற்கமைய குறித்த துறைகளைச் சார்ந்த நிபுணத்துவர்கள் அடங்கலாக சர்வதேச ஒத்துழைப்புக்கான விசேட அலகொன்றை நிறுவுவதற்காக வெளிவிவகார அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

# சட்டத்தரணிகளைப் பொலிஸ் துறைக்கு இணைக்கும் அதிகாரம் எனக்கு இல்லை!

## நீதி அமைச்சர் அந்தர் பல்டி

சட்டத்தரணிகள் 150 பேரை பொலிஸ் பரிசோதகர்களாக நான் இணைத்துக்கொள்ளப்போவதாகத் தெரிவிக்கப்படும் செய்திக்கும் எனக்கும் எந்த சம்பந்தமும் இல்லை. சட்டத்தரணிகளை பொலிஸுக்கு இணைத்துக்கொள்ளும் அதிகாரமும் எனக்கு இல்லை என நீதி அமைச்சர் அலிசப்ரி தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை வாய்மூல விடைக்கான கேள்விநேரத்தின்போது எதிர்க்கட்சி உறுப்பினர் புத்திக்க பத்திரண, சட்டத்தரணிகள் 150 பேர் பொலிஸ் பரிசோதகர்களாக இணைத்துக்கொள்ளப் போவதாக ஊடகங்களில் தெரிவிக்கப் பட்டிருக்கின்றன.

மொழி அடிப்படையில் இணைத்துக்கொள்ளும்போது சிங்கள பிரதேசங்களுக்கு சிங்கள மொழி தெரிந்தவர்களும் சிறுபான்மை மக்கள் இருக்கும் பிரதேசங்களுக்கு தமிழ் மொழி தெரிந்தவர்களும் இணைத்துக்கொள்ளும் நிலைமை ஏற்படும் என்றே நினைக்கின்றேன். ஆனால் அனைத்து பிரதேசங்களுக்கும் தமிழ், சிங்கள மொழியில் திறமையானவர்களை நியமிப்பதே நல்லது.



அத்துடன் பொலிஸ் திணைக்களத்துக்கு சட்டத்தரணிகளை இணைத்துக் கொள்ளும் நடவடிக்கையில் நீதித்துறைக்கு எவ்வாறான அதிகாரம் இருக்கின்றது என கேட்டதற்கு பதிலளிக்கையிலேயே நீதி அமைச்சர் இவ்வாறு குறிப்பிட்டார்.

# சுகாதார விதி மீறல் 31 பேர் கைதாகினர்!

சுகாதார விதிமுறைகளை மீறியக் குற்றச்சாட்டில் கடந்த 24 மணி நேரத்தில் மேலும் 31 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரதி பொலிஸ் மா அதிபர் அஜித் றோஹண தெரிவித்துள்ளார்.

இந்த நிலையில், கடந்த ஒக்ரோபர் 30 ஆம் திகதியிலிருந்து இதுவரையான காலப்பகுதியில் முகக்கவசம் அணியத் தவறிய மற்றும் சமூக இடைவெளியைப் பின்பற்றத் தவறிய குற்றச்சாட்டில் 2 ஆயிரத்து 662 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அதில் 2 ஆயிரத்து 500 பேருக்கு எதிராக வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளதாகவும் ஏனையோர்கள் எதிர்காலத்தில் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்படவுள்ளனர் என்றும் அஜித் றோஹண தெரிவித்துள்ளார்.

# கழிவுத் தேயிலையுடன் 7 பேர் கைதாகினார்கள்!

சீதுவ - கொட்டுகொட பகுதியில் 29 ஆயிரம் கிலோ கிராம் கழிவுத் தேயிலைத் தொகையுடன் 7 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் எனப் பொலிஸ் ஊடகப்பேச்சாளர் பிரதி பொலிஸ்மா அதிபர் அஜித் றோஹண தெரிவித்தார். இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமா:-

சீதுவ பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கொட்டுகொட பகுதியில் கடந்த திங்கட்கிழமை மாலை கோனஹேன பொலிஸ் விசேட அதிரடிப்படையின் புலனாய்வு பிரிவினருக்கு கிடைக்கப் பெற்ற தகவலுக்கமைய மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போது, 29 ஆயிரம் கிலோ கிராம் கழிவுத் தேயிலை தொகையுடன் ஏழு சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

குறித்த சந்தேக நபர்கள் இந்த கழிவுத் தேயிலைத் தொகையை 'இலங்கை தேயிலை' என்று குறிப்பிட்டு மத்திய கிழக்கு நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யும் எண்ணத்தில் அவற்றை கொள்கலன் ஒன்றில் ஏற்றிக் கொண்டு எடுத்துச் சென்று கொண்டிருந்த போதே, பொலிஸ் விசேட அதிரடிப்படையினர் அவர்களைக் கைது செய்துள்ளனர்.

சந்தேக நபர்கள் தொடர்பில் இலங்கை தேயிலை சபைக்கு தெரிவிக்கப்பட்டதையடுத்து, அவர்கள் மேலதிக விசாரணைகளுக்காக சீதுவை பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளனர். இதன்போது கொள்கலன் மற்றும் அதனை ஏற்றிச் சென்ற பாரவூர்தியும், கழிவுத் தேயிலைத் தொகையும் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

மேலும், இவர்களுக்கு எதிராக கடுமையான சட்டநடவடிக்கை எடுக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# தினம் ஒரு விவசாயத் தகவல்

## கவர்ச்சி பொறிகள்

பூச்சிகள் அதன் சுற்றுச் சூழலில் ஏற்படும் வெளிச்சம் மற்றும் வாசனை தூண்டுதலுக்கு ஏற்ப செயல்படுகின்றன. கவர்ச்சி பொறிகள் மூலம் பூச்சிகளை கட்டுப்படுத்தி அழிக்க முடியும். இயற்கை முறையிலான கவர்ச்சி பொறி என்பது சுற்றுச்சூழலுக்கு பாதிப்பில்லாமல் பயன்படுத்தி, பூச்சிகளை கட்டுப்படுத்தும் கருவியாகும். இதனை காய்கறி, பயிர், தோட்டப் பயிர்கள், எண்ணெய் வித்து பயிர்கள், மலைத்தோட்டப் பயிர்கள் என அனைத்திற்கும் பயன்படுத்தலாம். 'விளக்குப்பொறி' நன்மைகள்பொதுவாக தாய் பூச்சிகள் இரவில் விளக்கின் வெளிச்சத்துக்கு கவரக் கூடியவை.

1. இந்த தத்துவத்தின் அடிப்படையில் விளக்குப்பொறிகள், பூச்சிகளை கவரக் கூடிய சாதனமாக உள்ளன. பொறியை ஸ்டாண்டில் பொருத்தி பயிரின் உயரத்திற்கு வைக்க வேண்டும்.
2. விளக்கிற்கு அடியில் அகலமான பாத்திரத்தில் மண்ணெண்ணெய் கலந்த நீரை வைக்க வேண்டும்.
3. விளக்கு வெளிச்சத்துக்கு கவரப்படும் பூச்சிகள் நீரில் விழுந்து இறந்து விடும்.
4. ஏக்கருக்கு ஐந்து பொறிகள் வைத்தால் போதும். விளக்குப்பொறி எனும் கவர்ச்சி பொறிகள், புற ஊதா ஒளி தொழில்நுட்பம் மூலம் தாய் அந்து பூச்சிகளை கவரக்கூடியது. கருவிகளை எப்போதும் வேண்டுமானாலும் இயக்கலாம். இது அதிக வெளிச்சம் உடைய எல்.இ.டி., தொழில்நுட்பம் கொண்டது. தேவையான இடங்களுக்கு மாற்றுவது சுலபம். கருவியை மாலைப் பொழுதில் பயன்படுத்த வேண்டும்.

ர.ரஜீவன் - விவசாய பட்டதாரி

காலைக்கதிர் Kalaikkathir

# மாகாண சபைத் தேர்தலை நடத்த ஆணைக்குழு தயார்

## தலைவர் நிமல் புஞ்சிஹேவா தெரிவிப்பு



**கொழும்பு, ஜனவரி 20**

**மாகாண சபைத் தேர்தல் நடத்தப்பட்டு மக்கள் தமது ஜனநாயக உரிமையுடன் தமக்கான பிரதிநிதிகளைத் தெரிவு செய்வதற்கு வழிவகை செய்ய வேண்டும் என்பதே தேர்தல்கள் ஆணைக்குழுவின் நிலைப்பாடு.**

**- இவ்வாறு தேர்தல்கள் ஆணைக் குழுவின் தலைவர் நிமல் புஞ்சிஹேவா தெரிவித்தார்.**

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

மாகாண சபைத் தேர்தல் நடத்தப்பட வேண்டும். அதற்காக ஆளும் கட்சியும் எதிர்க் கட்சியும் பேச்சு நடத்தி முடிவு ஒன்றை எட்ட வேண்டும். அவ்வாறு தீர்மானம் மேற்கொள்ளப்பட்டால் மாகாண சபைத் தேர்தலை நடத்து வதற்குத் தேர்தல்கள் ஆணைக்குழு தயாராகவே உள்ளது.

மாகாண சபை கட்டமைப்பு நாட்டில் இப்போதும் உள்ளது. அதற்கான சட்டங்கள், அதற்கான அமைச்சுக்கள், பொறிமுறைகள் என அவை அனைத்தும் நடைமுறையில் உள்ளன.

எனினும், அவை ஆளுநர்கள் மற்றும் அதிகாரிகளினால் செயற்படுத்தப்படுகின்றன. அதனை முழுமையானதாகக் கருத முடியாது என்பதால் மாகாண சபைத் தேர்தல் நடத்தப்பட்டு மக்கள் பிரதிநிதிகள் தெரிவு செய்யப்பட வேண்டும். அதனூடாக மக்களுக்கான ஜனநாயகம் கிட்டுவதுடன் அதன்மூலம் மக்களுக் கான சேவைகள் சென்றடைய வேண்டும் என்பதே தேர்தல்கள் ஆணைக்குழுவின் நிலைப்பாடு.

புதிய தேர்தல் முறை, எல்லை நிர்ணயம் எனப் பல்வேறு குறைபாடுகள் காரணமாக மேலும் பல வருடங்களை வீணடிக்க முடியாது. பழைய முறையில் தேர்தலை நடத்த முடியும். அவ்வாறு நடத்துவதற்கு சிக்கல்கள் இருக்குமானால் அதற்கான ஒரு திருத்தத்தை மேற்கொள்ளவும் முடியும்.

அதேவேளை, தேர்தல் சட்டத்தில் திருத்தம் செய்வது தொடர்பில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

புதிய ஆணைக்குழு பொறுப்பை ஏற்றுக் கொண்ட மறுநாளே பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவுடன் அது தொடர்பில் பேச்சு நடத்தியுள்ளது.

தேர்தல் சட்டத்தில் திருத்தங்கள் மேற் கொள்வது அவசியம். அதற்கான செயற்பாடுகள் மந்த நிலையில் உள்ள நிலையில் அதனை நிவர்த்திக்க நடவடிக்கை எடுக்க வேண்டியுள்ளது. அது தொடர்பில் நாடாளுமன்றத் தெரிவுக்குழு ஒன்றை நியமித்து அதற்கானப் பரிந்துரைகளைப் பெற்றுக்கொள்ள முடியும். அது தொடர்பிலும் பிரதமரோடு கலந்துரையாடியுள்ளோம். - என்றார்.


## UNIVERSITY OF JAFFNA, SRI LANKA
## VACANCIES

University of Jaffna will entertain applications to **reach us on or before 03.02.2021** from qualified Sri Lankan Nationals for the under mentioned Temporary posts.

**FACULTY OF ALLIED HEALTH SCIENCES**

Temporary Demonstrator in **Medical Laboratory Sciences, Nursing and Pharmacy.**

**Minimum Requirements/Qualifications:**
A Degree with specialization in the relevant subject with Honours.

| Post | Salary Scale |
|---|---|
| Temporary Demonstrator | Rs. 40,920 p.m (Fixed) |

In addition to the above salary, the allowances approved by University Grants Commission applicable to the posts will also be paid.

Application forms and other details will be available in the **University of Jaffna website. www.jfn.ac.lk** Downloaded application forms should accompany the paid Bank Slip for deposit of a sum of Rs.100/- credited to the Peoples Bank Account No: 162-1-001-6-0000880 of Bursar, University of Jaffna.

Application forms and other details may be obtained from the Office of the Dean, Faculty of Allied Health Sciences, University of Jaffna, Sri Lanka, on a payment of Rs.100/- per application form. Those who wish to obtain application forms by post are requested to send a self- addressed stamped envelope 23x10 c.m. in size along with the paid Bank Slip to the above address.

Applicants from the University System/Government Departments/Corporations and Statutory Board should channel their applications through the Head of respective Institutions. Illegible, incomplete and late applications will be rejected without intimation. Only short-listed applicants will be called for an interview.

**Note-: Candidates who have completed the degree programmes and are awaiting for the degree certificates are eligible to apply**

**Registrar,**
**University of Jaffna,**
**20.01.2021**


# ரஞ்சனின் தலைவிதி இன்னும் மூன்று வாரங்களில் நிர்ணயம்



நீதிமன்றத்தை அவமதித்ததான குற்றச்சாட்டில் குற்றவாளியாகச் சிறைத் தண் டணை விதிக்கப்பட்டுள்ள நாடாளுமன்ற உறுப்பினர் ரஞ்சன் ராமநாயக்கவுக்கு சபை அமர்வில் கலந்துகொள்வதற்கு அனுமதி வழங்க முடியுமா அல்லது முடியாதா என்பது தொடர்பான தீர்மானத்தை மூன்று வார காலத்துக்குள் தான் அறிவிப்பதாக சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன சபையில் நேற்று அறிவித்தார்.

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ முன்வைத்த கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கையிலேயே சபநாயகர் இந்த விடயத்தைக் குறிப்பிட்டார்

ரஞ்சன் ராமநாயக்கா தொடர்பில் ஏற்பட்டுள்ள நிலைமை குறித்து முறையான சட்ட ஆலோசனையைப் பெற்று எனது தீர்மானத்தை அறிவிப்பேன். இது தொடர்பில் எந்தவொரு உறுப்பினரும் ஏதேனும் தெரிவிக்க விரும்பினால் இரண்டு வாரங்களுக்குள் அதனைக் கடிதம் மூலம் எனக்குச் சமர்ப்பியுங்கள் என்று சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன நாடாளுமன்றத்தில் நேற்று மேலும் தெரிவித்தார்.

# இராமேஸ்வரம் மீனவர்களின் படகுகளில் கறுப்புக் கொடி

(ந.லோகதயாளன்)

பாரம்பரிய இடங்களில் இந்திய மீனவர்கள் மீன்பிடிப்பதை இலங்கை கடற்படை தடுப்பதாகத் தெரிவித்து அதனைக் கண்டித்து சனிக்கிழமை 23 ஆம் திகதி கறுப்புக் கொடிகளுடன் படகுகளில் அணிவகுத்து கச்சதீவுக்குச் செல்லும் தமது போராட்டத்திற்கான முன்னேற்பாடாக தத்தமது படகுகளிற்கு கறுப்புக் கொடிகளைக் கட்டி தமிழக மீனவர்கள் தயாராகின்றனர்.

தமிழக மீனவர்களின் பல லட்சம் மதிப்பிலான விசைப் படகுகளை அரசமயாக்கியதற்கு எதிர்ப்பு தெரிவித்தும், கச் சத்தீவு ஒப்பந்தத்தை இலங்கை அரசு மீறுவதைக் கண்டித்தும் ராமேஸ்வரம் மீனவர்கள் தமது விசைப்படகுகளில் கறுப்புக் கொடி ஏற்றிப் போராட்டம் நடத்தி வருகின்றனர்.

கடந்த டிசம்பர் மாதம் இலங்கை கடற்படையால் சிறைபிடிக்கப்பட்டு, இலங்கை யாழ்ப்பாணம் காரைநகர் கடற்படை முகாமில் தங்க வைக்கப்பட்டு, இலங்கை அரசால் விடுதலை செய்யப்பட்ட மீனவர்கள் நேற்று சென்னை விமான நிலையம் வந்தடைந்தனர். ஆனால் மீனவர்களின் பல லட்சம் ரூபா மதிப்பிலான விசைப் படகுகளை இலங்கை அரசுடமை செய்வதாக ஊர்காவற்றுறை நீதிமன்றம் உத்தரவிட்டது.

இது தொடர்பில் ராமேஸ்வரம் மீனவர்கள் கடும் கண்டனம் தெரிவித்தும் -

இலங்கை அரசால் சிறைபிடிக்கப்பட்டு அரசுடமையாக்கப்பட்ட பல லட்சம் ரூபா மதிப்பிலான விசைப்படகுகளை உடனடியாக விடுவிக்கக் கோரியும் -

1974 ஆம் ஆண்டு போடப்பட்ட கச்சத்தீவு ஒப்பந்தத்தின்படி கச்சத்தீவு பகுதியில் தமிழக மீனவர்கள் மீன் பிடிக்கும் உரிமை, உண்டு அதையும் மீறி அப்குதிகளில் மீன் பிடிக்கும் தமிழக மீனவர்களை இலங்கை அரசு கைது செய்வதை கண்டித்தும் - பாரம்பாரிய இடத்தில் தமிழக மீனவர்கள் மீன் பிடிக்கும் உரிமையை மீட்டுத் தர வலியுறுத்தியும் - இன்று காலை ராமேஸ்வரம் மீன்பிடி துறைமுகத்தில் நிறுத்தி வைக்கப்பட்டடுள்ள விசைப்படகுகளில் கறுப்பு கொடி ஏற்றி எதிர்ப்பை தெரிவித்து வருகின்றனர்.

# பெருந்தோட்டத் தொழிலாளர்களை ஏமாற்றுகின்றது கோட்டாபய அரசு!

## நாடாளுமன்றில் அநுரகுமார சீற்றம்



பெருந்தோட்டத் தொழிலாளர்களை இந்த அரசு தொடர்ச்சியாக ஏமாற்றி வருகின்றது.

- இவ்வாறு ஜே.வி.பியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் இன்று நடைபெற்ற சபை ஒத்திவைப்பு வேளை பிரேரணை மீதான விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இது தொடர்பில் அநுரகுமார திஸாநாயக்க மேலும் தெரிவித்ததாவது:-

பெருந்தோட்டத் தொழி லாளர்களுக்கு 2020 மார்ச் முதலாம் திகதி முதல் ஆயிரம் ரூபா வழங்கப்படும் என்ற உறுதிமொழியை பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ வழங்கினார். கம்பனி வழங்க மறுத்தாலும் அதனை பெற்றுக்கொடுப்போம் எனவும் உறுதியாகக் கூறினார். ஆனாலும், இன்னும் சம்பள உயர்வு வழங்கப்படவில்லை.

அமரர் ஆறுமுகன் தொண்டமானின் இறுதிக்கிரியைகளில் பங்கேற்ற பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, ஆயிரம் ரூபா நிச்சயம் கிடைக்கும் எனச் சத்தியம் செய்தார். அந்த உறுதிமொழியும் இன்னும் நிறை வேற்றப்படவில்லை.

வரவு - செலவுத் திட்டத்தை முன் வைத்தும் ஆயிரம் ரூபா குறித்த உறுதிமொழியைப் பிரதமர் வழங் கினார். ஆனால் இன்னும் சம்பள உயர்வு கிடைக்கவில்லை. தொழிலாளர்களை இந்த அரசு ஏமாற்றி வருகின்றது - என்றார்.

# இந்தியாவை ஏமாளியாக...

(07 ஆம் பக்கத் தொடர்ச்சி)

**கொழும்பு துறைமுகம் கிழக்கு முனையம்**
**பிரச்சினை 1:**

இந்திய வெளியுறவுத் துறை அமைச்சர் ஜெய்சங்கர் இலங்கை சென்று திரும்பி நான்கு நாள்கள் தான் ஆகிறது. முள்ளிவாய்க்கால் நினைவு தூபி உடைப்புக்கு பின், இலங்கை அதிபர் கோட்டாபய ராஜபக்ஷவை கம்யூனிஸ்ட் தொழிற்சங்கங்கள் சந்தித்தப்போது கொழும்பு துறைமுகம் கிழக்கு முனையத்தை இந்தியாவிற்கு வழங்கப்படுவதை தெளிவில்லாமல் குழப்பமான பதிலைச் சொல்லியுள்ளார். இதற்கு காரணம் சீனா.

கடந்த 10 வருடங்களாக கொழும்பு துறைமுகம் கிழக்கு முனையத்தை இந்தியாவிற்கு வழங்க பேச்சுவார்த்தைகள் நடந்தன. இப்பொழுது அதிபர் கோட்டாபயவின் நிலைப்பாடு சந்தேகமாக உள்ளது.

இந்த கொழும்பு துறைமுகம் கிழக்கு முனையத்தை அடைய சீனா, அமெரிக்கா, ஜப்பான் நாடுகளும் போட்டியில் நிற்கின்றன. இந்தியாவிடமிருந்து நிதி உதவியும் பெற்றுக்கொண்டு, இலங்கையில் பல்வேறு திட்டங்களை நிறைவேற்றிக்கொண்டும் நம்மை எளிதாக இலங்கை நினைப்பது வேதனையான விஷயம்.

இந்தியாவைக் காட்டி சீனாவிடம் பணம் மட்டுமல்ல, பல உதவிகளையும் இலங்கை பெறுகின்றது. உளப்பூர்வமாக சீனாவிடம் நட்பு கொண்டு நம்மை ஏமாற்றுகின்றது. இதுதான் இலங்கையின் நிலைப்பாடு. இதை இந்திய அரசு உணர வேண்டும்.

**கொழும்பு துறைமுகம் கிழக்கு முனையம்**
**பிரச்சினை 2:**

இந்திய நாட்டுக்கும், உலகின் பல நாடுகளுக்கும், இடையில் நடைபெறும் கொள்கலன் கப்பல் மூலமான ஏற்றுமதி, இறக்குமதி பொருள்களை ஏற்றி இறக்கும் தொழில் வருமானத்தால்தான், கொழும்பு துறைமுகம் லாப வருமானம் பெறுகிறது.

பல பத்தாண்டுகளாக, பெரிதும் வெளிவராத, உண்மை கதை இதுவாகும். கொழும்பு துறைமுகத்தில் சுமார் 70 வீதத்துக்கு குறையாத கொள்கலன் பரிமாற்றம் இந்திய நாட்டுக்கு போவதும், வருவதும்தான்.

பெரும் கொள்கலன்களை சுமந்து வரும் பெரிய கப்பல்கள் பொதுவாக தமது பயணத்தில் ஒருசில துறைமுகங்களுக்குதான் போகும். எல்லா துறைமுகங்களிலும் நின்று போவது, வர்த்தக ரீதியாக பெரிய கப்பல்களுக்கு சரிபட்டு வராது.

இந்நிலையில் தென் இந்தியாவில் ஆழமான துறைமுகங்கள் இல்லாததால், இந்தியாவுக்கு வரும் பெருந்தொகை கொள்கலன்களை, கொழும்பில் இறக்கி விட்டு, பெரிய கப்பல்கள் தொடர்ந்து பயணிக்கின்றன. அவற்றை பின்னர் சிறிய இந்திய கப்பல்கள் வந்து, ஏற்றிக்கொண்டு இந்தியாவுக்கு செல்கின்றன.

இதுதான் பல ஆண்டுளாக நடக்கின்றது. இதனால்தான் கொழும்பு துறைமுகமே இயங்குறது. கொழும்பு துறைமுக வருமானத்தால்தான் நாட்டின் ஏனைய துறைமுகங்களும் (காங்கேசன், ஹம்பாந்தோட்டை, திருகோணமலை) செயல்படுகின்றன. பல்லாயிரக்கணக்கானவர்களுக்கு வேலைவாய்ப்புகளும் கிடைக்கின்றன.

இந்நிலையில் இந்தியாவும் தென்னிந்தியாவில் தங்களுக்கு என்று ஒரு ஆழமான பெரிய கப்பல்கள் வந்து போகக்கூடிய துறைமுகங்களை அமைக்காமல் இலங்கைக்கு இந்தியா நேரு காலத்திலிருந்து விட்டுக்கொடுத்து கொண்டு இருக்கிறது.

இலங்கை அரசு, எப்போதாவது ஒருநாள் தமக்கு முழுமையான ஆதரவு நாடாக மாறும் என்ற எதிர்பார்ப்பில் உள்ள இந்தியாவின் 50 ஆண்டுக்கால இலவு காத்த கிளி இந்தியாவின் வெளிநாட்டுக் கொள்கை ஆகி விட்டது.

புதிய இலங்கையையே தம் உழைப்பால் உருவாக்கிய மலையக தமிழரை, சிறிமா – சாஸ்திரி ஒப்பந்தம் செய்து, நாடு கடத்த இந்தியா, இலங்கையை சந்தோஷப்படுத்தும் ஒரே காரணத்துக்காக இணங்கியது.

இது இலங்கை வாழ் மலையக தமிழருக்கு இந்திய அரசு செய்த பெரும் வரலாற்று துரோகமாகும். இதனால், இலங்கையில் தமிழர், மலையக தமிழர் என இரு தமிழ் பிரிவினிரின் அரசியல் பலம் குன்றியது. அதை தொடர்ந்து, கச்சத்தீவை, தமிழகத்தின் எதிர்ப்பை கவனத்தில் எடுக்காமலேயே இலங்கைக்கு கொடுத்தது.

விடயம் என்னவென்றால், இவ்வளவு செய்தும், இலங்கை, இந்தியாவுடன் உண்மை நட்பு கொள்ளவில்லை.

இப்போதும், இந்தியாவின் இலங்கை கொள்கை காரணமாக, ஒரு பிராந்திய துறைமுகமாக, இந்திய பொருள்களை ஏற்றி இறக்கியே, கொழும்பு துறைமுகம், இந்திய துறைமுகங்களை விட சிறப்பாக செயல்படுகிறது.

இந்நிலையில் இப்படி பொருளாதரத்தில் பலமடங்கு பெரிய நாடான இந்தியாவுடன் சேர்ந்து வளர வேண்டிய வாய்ப்பை இன்னமும் வளர்க்க வழி தேடாமல், மெத்த படித்த இலங்கையின் இனவாத சீனா சார்பு அரசியல்வாதிகள், பிராந்திய களஞ்சிய துறைமுகம் என்பதை விட, கொழும்பை உலக களஞ்சிய துறைமுகமாக மாற்றும் யோச னையை சீனாவுடன் சேர்ந்து முன்னெடுக்க திட்டம் போடுகிறார்கள். இதுகுறித்து, இந்திய அரசுக்கு இப்பவும் புரிதல் இல்லை.

இலங்கையை தாண்டி தெற்கு இந்து சமுத்திரத்தில் உலகெங்கும் போகும் வணிக கப்பல்களை, தங்கள் பொருள்களை இங்கே இறக்கி விட்டு போங்கள், நாங்கள் இங்கே இருந்து அவ்வந்த நாடுகளுக்கு அனுப்புகிறோம் என்று சொல்லும், இலங்கை – சீனா கூட்டு கனவு திட்டம் இதுவாகும்.

அதாவது, இன்றுவரை வருமானம் தேடி தரும் இந்தியாவை புறக்கணித்து விட்டு, இந்த கனவு திட்டத்திற்காக சீனா ஆதரவுடன் கொழும்பு துறைமுகத்தை விரிவாக்கம் செய்யலாம் என்பது இவர்களின் நோக்கம். (இதில் சீனாவின் நோக்கம் என்னவென்பது சீனாவுக்கு மட்டுமே தெரியும்.)

இதற்காக, கொழும்பு துறைமுகத்தின் இன்றைய மிகப்பெரிய முனையமான **South Asian Gateway Terminal** (எஸ்ஏஜிடி) என்பதை முழுமையாக சீனாவுக்கு கொடுத்து விட்டு, பக்கத்தில் துறைமுக நகரையும் **(Port City)** சீனாவின் ஆளுமைக்கு கீழ் கட்டுகிறார்கள். எதிர்காலத்தில் எஸ்ஏஜிடி முனையத்தில் இருந்து துறைமுக நகருக்கு கொள்கலன்களை நேரடியாக இறக்கும் வாய்ப்பு கூட எதிர்காலத்தில் அவசியமானால் ஏற்படலாம்.

எஸ்ஏஜிடி முனையம் முழுமையாக சீனாவுக்கு கொடுக்கப்பட்ட போது, அமைதியாக இருந்த அரசு சார்பு அரசியல் தொழிற்சங்கங்கள், இப்போது, இலங்கை அரசுக்கு 51 வீதம் ஜப்பான் நிறுவனத்துக்கு 29 வீதம், இந்திய நிறுவனத்துக்கு 20 வீதம் என்ற கிழக்கு முனைய ஒப்பந்தத்தை கடுமையாக எதிர்க்கின்றன.

முதல் எஸ்ஏஜிடி முனையம் முழுமையாக சீனாவுக்கு கொடுக்கபட்ட போது அமைதியாக இருந்தவர்கள், இப்போது இந்தியாவுக்கு கொழும்பு துறைமுகத்தின் கிழக்கு முனையம் விற்கப்படுகிறது என கூச்சல் எழுப்புகிறார்கள்.

ஆகவே இங்கே அப்பட்டமாக இந்திய எதிர்ப்பு தான் தெரிகிறது. இந்நிலையில், இன்று இந்தியா பொறுமையின் விளிம்பில் இருக்கிறது.

இதனைப் பத்தாண்டுகளாக கொழும்பு துறைமுகத்துக்கு லாபம் பெற்றுக்கொடுத்ததையும் மறந்து, சீனாவுடன் இலங்கை உறவாடுவதையும், இந்திய தென் கோடி எல்லைக்கு அருகே, கொழும்பு துறைமுகத்தில் சீனாவுக்கு கேந்திர இடம் கொடுக்கப்படுவது இந்தியாவிற்கு நல்லது அல்ல.

தமிழகத்தின் தென்கோடியில் குளச்சலில் புது துறைமுகம் ஒன்றை கட்டும் திட்டத்தில் இந்தியா இன்று இருக்கிறது. மேலும் கேரளத்திலும், அந்தமானிலும் புது துறைமுகங்கள் கட்டவும் முனைகிறது.

இவை உருவாகிவிட்டால் இந்திய கப்பல் – கொள்கலன்கள் கொழும்பு வர தேவையில்லை. இது இலங்கைக்கு பெரும் பொருளாதார சரிவை ஏற்படுத்தும்.

அதுமட்டுமல்ல, இலங்கை கனவு காணும் இந்து சமுத்திரத்தில் பயணிக்கும் ஏனைய பெரிய கப்பல்களையும் இந்த இந்திய துறைமுகம் இறக்கி வைத்து, அவ்வந்த நாடுகளுக்கு அனுப்பும். குறிப்பாக சீன எதிர்ப்பு நாடுகளான ஜப்பானின், தென்கிழக்கு ஆசிய நாடுகளின், கொரியாவின் பெரிய கப்பல்களும் கொழும்பை விட, தென்னிந்திய துறைமுகத்தையேவிரும்பும்.

தூரத்து உறவுக் காரனை நம்பி, பக்கத்து வீட்டு அண்ணனை பகைக்கும் மெத்த படித்த இலங்கையின் இனவாத சீனா சார்பு அரசியல்வாதிகளினால் இலங்கை, முட்டாள்தனமான நடக்கிறது.

இந்தியா சுதந்திரம் பெற்ற 1947 இலிருந்து நேரு காலம் முதல் இன்று வரை நாம் இப்பிரச்சினையில் இலங்கைக்கு விட்டுக்கொடுத்துக் கொண்டிருக்கிறோம்.

நம்மிடமிருந்து வளங்களை, பல திட்டங்களை, நிதி என பெற்றுக்கொண்டு இலங்கை நம்மை ஏமாளியாக நினைக்கிறது.

இந்தியா எப்போது இதை உணரும்..?

# 'ஒரு வங்கி ஒரு கிராமம்' செயற்றிட்டம் கிளிநொச்சியில் நேற்று ஆரம்பிப்பு!




'ஒரு வங்கி ஒரு கிராமம்' என்ற அடிப்படையில் தத்தெடுக்கும் செயற்றிட்டம் கிளிநொச்சி – திருவையாறு கிராமத்தில், வடக்கு மாகாண ஆளுநர் பி.எம்.எஸ். சார்ள்ஸால் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

கிளிநொச்சி மாவட்டத்தில் இயங்கிவரும் பதிவு செய்யப்பட்ட வங்கிகள், ஒரு கிராமத்தை தத்தெடுத்து அனைத்துத் துறைகளையும் ஒன்றிணைத்து குறித்த கிராமத்தை பல்துறை சார் உற்பத்திகளை இனங்கண்டு, அவர்களின் பொருளாதாரத்தை மெருகூட்டி பசுமையான கிராமமாக மாற்றும் நோக்கிலமைந்த 'ஒரு வங்கி ஒரு கிராமம்' என்ற அடிப்படையில் தத்தெடுக்கும் செயற்றிட்டம் கிளிநொச்சி, திருவையாறு கிராமத்தில் தேசிய சேமிப்பு வங்கியால் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபரின் தலைமையில் கடந்த (செவ்வாய்க்கிழமை) மு.ப. 10 மணிக்கு, திருவையாறு பொது நோக்கு மண்டபத்தில் இந்த நிகழ்வு இடம்பெற்றுள்ளது.

வடக்கு மாகாணத்தில் விவசாயத் துறையையும் மக்களின் ஏனைய வாழ்வாதார நடவடிக்கைகளையும் மேம்படுத்தும் நோக்கில், ஆளுநரின் தலைமையில் கடந்த 2020.11.20 ஆம் திகதியன்று மாவட்ட அரசாங்க அதிபர்கள், வடக்கு மாகாணத்திலுள்ள வங்கிகளின் உயரதிகாரிகள், விவசாய அமைச்சு அதுசார்ந்த திணைக்கள அதிகாரிகளுடன் இடம்பெற்ற கலந்துரையாடலில் 'ஒரு வங்கி ஒரு கிராமம்' என்ற அடிப்படையில் தத்தெடுத்த அக்கிராமத்திலுள்ள வாழ்வாதார நடவடிக்கைகளுக்கு நிதியீட்டம் மற்றும் வசதிப்படுத்தல்களை செய்வதனூடாக வறிய மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் நோக்கிலமைந்த சிந்தனையில் மேற்படி திட்டத்தைச் செயற்படுத்தவதற்கான தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

அதனடிப்படையில் இந்தச் செயற்றிட்டம் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது. வங்கிகள் கடன் திட்டங்களை வழங்குவதிலிருந்து சற்று மாறுபட்டு சகல துறைகளையும் ஒருங்கிணைத்து வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் நோக்கில் அமைந்த வேலைத் திட்டங்களை கிராமத்திற்கு மிகப் பொருத்தமானவற்றை இனங் கண்டு பயிற்சிகள் உட்பட்ட அனைத்து வசதிகளையும் ஏற் படுத்திக் கொடுத்து தொடர்ச்சியாக கண்காணிப்பு மூலம் குறிப்பாக இளம் சமூகத்தை பொருளாதார அபிவிருத்தி சார்ந்து முன்னேற்றும் வகையில் இந்த செயற்றிட்டம் அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# மட்டு மாவட்ட செயலகத்தில் ஒருவருக்கு கொரோனா உறுதி!

மட்டக்களப்பு மாவட்ட செயலகத்தின் காணிப் பதிவகத்தில் பணிபுரியும் ஊழியருக்கு கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இந்நிலையில், சுகாதாரத் திணைக்கள உத்தியோகத்தர்களின் அறிவுறுத்தலுக்கு அமைவாக காணிப் பதிவகத்தின் செயற்பாடுகள் மறு அறிவித்தல் வரை இடைநிறுத்தப்பட்டுள்ளதாக மாவட்ட அரசாங்க அதிபர் கணபதிப்பிள்ளை கருணாகரன் தெரிவித்தார்.

காணிப் பதிவகத்தில் பணிபுரியும் ஊழியர் நேற்று (புதன் கிழமை) கடமைக்காக அலுவலகத்துக்கு வரும் வளியில் வீதி விபத்தில் சிக்கியிருந்தமையால். இதையடுத்து களுவாஞ்சிக்குடி வைத்தியாலையில் சேர்க்கப்பட்ட போது அங்கு மேற்கொண்ட அன்டிஜன் பரிசோதணையில் கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

இந்நிலையில், மாவட்ட காணிப் பதிவகத்தில் பணியாற்றுகின்ற அனைத்து உத்தியோகத்தர்களும் சுகாதாரத் திணைக்களத்தின் அறிவுறுத்தலுக்கு அமைவாக தங்களின் வீடுகளில் சுய தனிமைப்படுத்தலுக்கு உள்ளாக்கப்பட்டுள்ளனர் என அரச அதிபர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, காணிப் பதிவகத்தின் சேவைகளைப் பெறுவதற்கு வருகின்ற பொதுமக்கள் மறு அறிவித்தல் வரை சேவைகளைப் பெறமுடியாது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

மஞ்சள் கன்றுகள் விற்பனைக்கு!
நல்ல தரமான இரண்டு அடி வரை வளர்ந்த
ஒன்றரை மாத மஞ்சள் கன்றுகள்
யாழ்ப்பாணத்தில் விற்பனைக்கு உண்டு.
விலை - 150/=



கற்பகவனம் விற்பனை நிலையம்.
461, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
(யாழ் முற்றம் - Yarl Muttam)
021 492 7778

# மேய்ச்சல் தரை அபகரிப்புக்கு எதிர்ப்பு: கொக்கட்டிச்சோலையில் ஆர்ப்பாட்டம்!





மட்டக்களப்பு - பட்டிப்பளை பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட பிரதேசத்தில் கால்நடைக்கு ஒதுக்கப்பட்ட மேய்ச்சல் தரையை பெரும்பான்மை மக்கள் அத்துமீறி பிடிக்கின்றமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து ஆர்ப்பாட்டமொன்று நேற்று (புதன்கிழமை) முன்னெடுக்கப்பட்டது.

கால்நடை பண்ணையாளர்கள் மற்றும் அரசியல்வாதிகள் பட்டிப்பளை பிரதேசத்தில் இருந்து பேரணியாக பிரதேச செயலகம் வரை சென்று, ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

மட்டக்களப்பு - பட்டிப்பளை பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட கச்சக்கொடி சுவாமிமலை 135 கிராம சேவகர் பிரிவிலுள்ள பரிபாலன திணைக்களத்துக்குச் சொந்தமான மணல் ஏற்றம், காத்தாடியார் சேனை, பொன்னாங்கண்ணிசேனை, பனையடிவெட்டை, மலையடிவெட்டவிச்சுகுளம் ஆகியன பிரதேச கால்நடைகளுக்கான மேய்ச்சல் தரையை பண்ணையாளர்கள் பரம்பரை பரம்பரையாகப் பயன்படுத்தி வருகின்றனர்.

இந்நிலையில், சில வருடங்களாகப் பெரும்பான்மை மக்கள் அத்துமீறிய பயிர் செய்கையில் ஈடுபட்டு வருகின்றமையுடன், 1500 ஏக்கருக்கு அதிகமான காடுகள் அழிக்கப்படுவதுடன் முட்கம்பிகள் பயன்படுத்தப்பட்டு வேலிகள் அமைக்கப்பட்டுள்ளன.

இந்த மேய்ச்சல் தரை அபகரிப்புக்கு எதிர்ப்பு தெரிவித்து நேற்று காலை 10 மணியளவில் பட்டிப்பளை பிரதேச சபைக்கு முன்னாள் ஒன்று கூடிய கால்நடை பண்ணையாளர்கள், அரசியல்வாதிகள் ஒன்றிணைந்து ஆர்ப்பாட்டம் ஒன்றை முன்னெடுத்து அங்கிருந்து பட்டிப்பளை பிரதேச செயலகம் வரை ஆர்ப்பாட்டமாக சென்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இதனையடுத்து இதில் நாடாளுமன்ற உறுப்பினர் கோவிந்தன் கருணாகரன், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் அரியநேத்திரன் மற்றும் பட்டிப்பளை பிரதேச சபை தவிசாளர், போரதீவுப்பற்று பிரதேச சபை தவிசாளர் ஆகியோர் பிரதேச செயலாளரிடம் மகஜர் ஒன்றை கையளித்து அங்கிருந்து விலகிச் சென்றனர்.

# ரஞ்சனுக்கு நீதி கிடைக்கும்வரை நாடாளுமன்றுக்கு கறுப்புப் பட்டி!

## அணியவுள்ளார் எனக் ஹரின் அறிவிப்பு

நாடாளுமன்ற உறுப்பினர் ரஞ்சன் ராமநாயக்கவுக்கு நீதி கிடைக்கும்வரை நாடாளுமன்றில் கறுப்புப் பட்டியை அணியவுள்ளார் என நாடாளுமன்ற உறுப்பினர் ஹரின் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றில் நேற்று (புதன்கிழமை) இடம்பெற்ற சபை ஒத்திவைப்பு வேளை விவாதத்தின்போதே ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஹரின் பெர்னாண்டோ இவ்வாறு கூறினார்.

மேலும் தான் நீதிமன்றத்தையும் நீதிபதிகளையும் விமர்சிக்கவில்லை எனக் குறிப்பிட்டுள்ள அவர், மாறாக தனது நண்பனுக்கு இழைக்கப்பட் அநீதிக்கே குரல் கொடுப்பதாக ஹரின் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

இதேவேளை இலங்கையில் தற்போது வர்த்தமானி வெளியிடும் கலாசாரம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது என்றும் பொருள்களின் விலைகள் குறைக்கப்படுவதாகக் கூறினாலும் எந்தவொரு கடையிலும் விலைகள் குறைக்கப்படுவதில்லை என்றும் குறிப்பிட்டார்.

மேலும் ஈஸ்டர் தாக்குதலுடன் தொடர்புடையவர்கள் கைது செய்யப்படுவார்கள் என வாக்குறுதி அளித்து இந்த அரசாங்கம் ஆட்சிக்கு வந்த போதும் இன்று பயங்கரவாதி ஒருவரின் தொழிற்சாலையில் வேலை செய்த 10 பேர் விடுதலை செய்யப்பட்டுள்ளார்கள் என்றும் குறிப்பிட்டார்.

# ரஞ்சன் விடுதலைக்கு ஒரே வழி ஜனாதிபதியின் பொதுமன்னிப்பே!

**டிலான் பெரேரா 'அட்வைஸ்'**

நாடாளுமன்ற உறுப்பினர் ரஞ்சன் ராமநாயக்க விடுதலையாவதற்கு ஒரே மாற்றுவழி ஜனாதிபதி பொது மன்னிப்பாகும் என ஆளுங்கட்சி உறுப்பினர் டிலான் பெரேரா தெரிவித்தார்.

உண்மையாகவே அவருக்காக செயற்படுவதாக இருந்தால், அவருக்கு பொது மன்னிப்பை பெற்றுக்கொடுக்க முயற்சிக்கவேண்டும் எனவும் தெரிவித்தார்.

மேலும் அதனைப் பெற்றுக்கொள்ளவே எதிர்க்கட்சி முயற்சிக்கவேண்டும் எனவும் அவர் வலியுறுத்தினார்.

ஆனால் ரஞ்சனுக்காகச் செயற்படுவதாக தெரிவித்துக்கொண்டு அடுத்த நாடாளுமன்ற தேர்தலிலும் அவர் போட்டியிடுவதைத் தடுப்பதற்கே சிலர் முயற்சிக்கின்றனர் எனவும் அவர் தெரிவித்தார்.

மேலும் ரஞ்சனுக்கு வழங்கப்பட்டிருக்கும் நீதிமன்ற அவமதிப்பு குற்றத்துக்கான தீர்ப்பு, ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்க காலத்தில் தொடுக்கப்பட்ட வழக்கின் தீர்ப்பாகும் எனவும் அவர் தெரிவித்தார்.

தீர்ப்பு வழங்கிய நீதிபதிகள் தொடர்பாக ரஞ்சன் உட்பட எதிர்க்கட்சியினருக்கு நல்ல அபிப்பிராயம் இருக்கின்றது என்றும் அதனால் நீதிபதிகள் ஒருதலைப் பட்சமாகத் தீர்ப்பு வழங்கினர் எனத் தெரிவிக்க முடியாது எனவும் அவர் குறிப்பிட்டார்.

அத்துடன் ரஞ்சனுக்கு தற்போது உயர்நீதிமன்றமே தீர்ப்பளித்து சிறைத் தண்டனை வழங்கி இருக்கின்றது எனவும் நாட்டின் சட்டத்தின் பிரகாரம் அவருக்கு விதிக்கப்பட்ட தண்டனை காலத்துக்கு பின்னரே வெளியில் வரமுடியும் எனவும் சுட்டிக்காட்டினார்.

அவ்வாறு இல்லாவிட்டால் இருக்கும் ஒரே மாற்றுவழி ஜனாதிபதி பொது மன்னிப்பை பெற்றுக்கொள்வதாகும். அதனால் ரஞ்சன் ராமநாயக்கவை நாடாளுமன்றத்துக்கு அழைத்துவரவேண்டும் எனத் தெரிவிக்கும் எதிர்க்கட்சியினர்,

# கொரோனாவால் பாதிக்கப்பட்டோரின் மத உணர்வுகளை மதிக்க வேண்டும்

## அமெரிக்கத் தூதுவர் வலியுறுத்தல்

கொரோனாவால் பாதிக்கப்பட்டவர்களின் மத உணர்வுகளை மதிக்கவேண்டும் என இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் அலைனா பி டெப்பிளிட்ஸ் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

கொரோனா வைரஸ் தொற்றால் உயிரிழப்போரின் சடலங்கள் இலங்கை அரசாங்கத்தால் தகனம் செய்யப்பட்டு வருகின்றன.

எனினும், இறந்த முஸ்லிம்களின் சடலங்களை அவர்களின் மத நம்பிக்கைக்கு இணங்க அடக்கம் செய்யுமாறு பல்வேறு தரப்புக்களாலும் வலியுறுத்தப்பட்டு வருகின்றது.

இந்த நிலையிலேயே, கொரோனாவால் பாதிக்கப்பட்டவர்களின் மத உணர்வுகளை மதிக்கவேண்டும் என இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் அலைனா பி டெப்பிளிட்ஸ் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

கொரோனா வைரஸால் உயிரிழந்த அனைவரினதும் குடும்பத்தினருக்கு ஆதரவாக அமெரிக்கா உள்ளது எனக் குறிப்பிட்டுள்ள அவர், சர்வதேச சுகாதார வழிகாட்டுதல்களின்படி மதநம்பிக்கைகளை பின்பற்ற அனுமதிப்பதன் மூலம் உரிமையையும் கௌரவத்தையும் மதிக்கவேண்டும் எனவும் வலியுறுத்தியுள்ளார்.

இலங்கை 1955 இல் கைச்சாத்திட்ட சர்வதேச மனித உரிமை பிரகடனம் அனைவரும் கற்பித்தல், பின்பற்றுதல், வழிபடுதல் போன்றவற்றில் தங்கள் மதநம்பிக்கையை பின்பற்றுவதற்கான உரிமையுள்ளது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

வைரஸ் தொற்று சர்வதேச சவால்களை உருவாக்கினாலும் இதற்காக இரக்க குணத்தையும் நம்பிக்கைகளை மதிப்பதையும் இழக்கும் நிலையேற்படக்கூடாது எனவும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

கல்யாணமாலை
வட சர்வதேச திருமண சேவை

**மணமகன் விவரம்**
பிறந்த திகதி - 1983.10.18
மதம் - இந்து ஆசாரி
நட்சத்திரம் - பூரட்டாதி 1
செவ் - 7 இல்
பாவம் - 62 3/4
கல்வி - A/L
தொழில் - ஆஸ்திரேலியா PR
எதிர்பார்ப்பு - ஆஸ்திரேலியா வர விரும்பும் ஆசாரிப் பெண் தேவை.

**மணமகள் விவரம்**
பிறந்த திகதி - 1990.05.04
மதம் - இந்து ஆசாரி
நட்சத்திரம் - பூரம்
சூ/செவ் - -------
பாவம் - 32 3/4
கல்வி - A/L
தொழில் - தாதியர்
எதிர்பார்ப்பு - விவாகரத்தான பெண் ஒருபிள்ளை உண்டு விரும்புவர் ஆசாரி குல ஆண் தொடர்பு கொள்ளலாம்

Kalyanamalai Vada.com தினசரி முகநூலிலும், யாழ் காலைக்கதிர் பத்திரிகையில் காலையிலும் மாலையிலும் வெளிவரும் மணமக்களை நீங்களே தெரிவு செய்து எம்முடன் தொடர்புகொள்ள நாம் திருமணத்தை நிறைவேற்றித் தருவோம். மணமக்கள் விண்ணப்பப் படிவத்தினை புத்தகக் கடைகளிலும், பத்திரிகை விற்பனை நிலையங்களிலும் வாங்கி விண்ணப்பியுங்கள், முக நூலிலும் விண்ணப்பம் உண்டு. அலுவலக நேரம் காலை 9 தொடக்கம் 5 வரை. சனி, ஞாயிறு மற்றும் போயா தினங்களில் பதிவுகளை மேற்கொள்ள முடியும். பதிவுக் கட்டணம் 1000 + 300.
க.இல - 8000661351 வர்த்தக வங்கி, பருத்தித்துறை.

குஞ்சர் கடையடி,
பருத்தித்துறை பிரதான வீதி,
இமையாணன் கிழக்கு,
உடுப்பிட்டி, வல்வெட்டித்துறை
077 3434 415
077 8578 528

EXPRESS Courier Services
அண்ணா
விரைவுப் பொதிகள் சேவை
3-6 நாட்கள்
077 8889388
075 3305500
070 3305500
லண்டன் ⇒ 1000/=
15,000 /= பெறுமதி வரை காப்புறுதி இலவசம்
லண்டன், பிரான்ஸ், ஜேர்மனி உட்பட 20 நாடுகளுக்கு மேலதிக கட்டணமாக வரிகள் ஏதும் இல்லை
உங்கள் வீடுகளுக்கே வந்து பொதிகள் பெற்றுக்கொள்ளப்படும். (யாழ் மாவட்டம் முழுவதும்)
எம்முடன் இணைந்து உங்களிடத்தில் பொதிகள் சேவை தொடங்குவதாயின் தொடர்புகொள்ளவும்

| | | |
|---|---|---|
| யாழ்ப்பாணம் | சங்கத்தானை | கனகராயன்குளம் |
| சங்கானை | பளை | மல்லாவி |
| கல்வியங்காடு | கிளிநொச்சி | மன்னார் |
| ஆவரங்கால் | புதுக்குடியிருப்பு | வவுனியா |
| நெல்லியடி | முல்லைத்தீவு | கொழும்பு |

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 21.01.2021 இல் வெளியிடப்பெற்றது.